# அருள்வழங்கும் மாரியம்மன்



பிரம்மஸ்ரீ. ப.சிவானந்தசர்மா B.A(Hons)
(கோப்பாய் - சிவம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# அருள் வழங்கும் மாரியம்மன்

அன்னை முத்துமாரியின் அருட்பெருமையும்
மாரியம்மன் வழிபாடு பற்றிய வரலாறும்
இதிஹாச புராண சிவாகம அடிப்படையிலான ஆய்வும்.



ஆசிரியர்:
பாரத்வாஜ. பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.Hons.
(கோப்பாய் சிவம்)

வெளியீடு:
சர்வானந்தமய பீடம்.
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : *Arul Vazhangum Mariyamman*

Subject : All About The Worship Of The Goddess Maariyamman

Language : Tamil

Author : P. Sivanandasarma B.A. (Hons) (Kopay Sivam)

Address : Near Kandasamy Kovil, Inuvil West, Chunnakam, Sri Lanka.

Rights : To The Author

Type Setting & Designing : Sri Vidya Computer Press, Inuvil

Cover design : Guru - Thirunelvely

Printers : Sivaranchanam - Kondavil

Publishers : Sarvananthamaya Peedam

Pages : 84 + x

Date ot Publication : 09 -07- 2004.

Price : Rs. 125 /=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்மன்**

எமது குலதெய்வமாகிய முத்துமாரி அம்மன்
பாதங்களை முதலில் இறைஞ்சி
அவளை அர்ச்சிக்கும் பேறுபெற்ற
எமது குருபரம்பரையில்
இன்று எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கும்
மூத்த அர்ச்சகரும்
அண்மையில் மணிவிழாக் கண்டவருமாகிய
பிரம்மஸ்ரீ கு. மங்கலேஸ்வர சர்மா
(மூர்த்தி ஐயா)
தம்பதிகளின் ஆசியை வேண்டி

இந்நூலைப் பணிவன்புடன்
அன்பர்கள் முன்
சமர்ப்பிக்கிறேன்.

**பாரத்வாஜ. பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா** B.A.Hons.

***(கோப்பாய் சிவம்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீட்டுத் தரவுகள்


| | |
|---|---|
| நூலின் பெயர் | அருள் வழங்கும் மாரியம்மன் |
| மொழி | தமிழ் |
| விடயம் | அன்னை முத்துமாரியின் அருட்பெருமையும் மாரியம்மன் வழிபாடு பற்றிய வரலாறும் இதிஹாச புராண சிவாகம அடிப்படையிலான ஆய்வும். |
| தொகுப்பாசிரியர் | பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.Hons.<br>(கோப்பாய் சிவம்)<br>கந்தசாமி கோவிலடி,<br>இணுவில், சுன்னாகம், ஸ்ரீலங்கா. |
| வெளியீடு | சர்வானந்தமய பீடம் |
| கணினி வடிவமைப்பு | ஸ்ரீவித்யா கணனி அச்சகம்,<br>இணுவில், சுன்னாகம். |
| அச்சுப்பதிப்பு | சிவரஞ்சனம், கோண்டாவில். |
| அட்டைப்படம் | குரு – திருநெல்வேலி. |
| பக்கங்கள் | 84 + X |
| முதற்பதிப்பு | 09 – 07 – 2004. |
| விலை | **125/=** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை ~

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
**இந்து நாகரிகப் பேராசிரியர், கலைப்பீடாதிபதி**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

எமது சமய மரபில் அன்னை முத்து மாரியம்மனின் வழிபாடு காலங்காலமாக பக்திபூர்வமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. உலகத்தின் நாயகியாக விளங்கும் முத்துமாரியம்மனுக்கு ஊர்தோறும் ஆலயங்கள் எழுப்பப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று வருவதோடு கிராமிய நிலையிலும் மக்கள் நம்பிக்கையுடனும் பக்தியுடனும் வழிபட்டு வருகின்றனர்.

மாரியம்மன் வழிபாடு பற்றிய பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய நிலையில் 'அருள் வழங்கும் மாரியம்மன்' என்ற இந்நூலை ஆசிரியர் பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) உருவாக்கியுள்ளதையிட்டு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முத்துமாரியம்மன் பற்றிய ஆக்கங்கள் பல முன்னரும் வெளிவந்துள்ள போதும் இந்நூலில் ஆசிரியர் அன்னை முத்துமாரியம்மனின் அருட்பெருமைகளையும் சிவாகம இதிகாச புராண அடிப்படையிலான வழிபாட்டு முறைகளையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்நூல் ஆன்மீகத்துறை சார்ந்த அன்பர்களுக்கும் மற்றும் இவ்வழிபாட்டு மரபு பற்றி அறிய விழையும் மாணவர்கள், ஆய்வாளர்கள் ஆகியோருக்கும் சிந்தனைக்கு விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பல சமய நூல்களையும் இலக்கிய ஆக்கங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளையும் எழுதி வெளியிடுவதில் பெரும் ஈடுபாடு கொண்ட கோப்பாய் சிவம் தமக்குக் கிடைத்த தகவல்களைக் கொண்டு முத்துமாரியம்மன் பற்றிய இந்நூலை உருவாக்கியுள்ளார். அவரது இம் முயற்சியை சமய ஆர்வலர்கள் உவந்து வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

இந்நூலின் ஆசிரியர் கோப்பாய் சிவம் எதிர்காலத்திலும் இத்தகைய பணிகளைத் தொடர அவருக்கு அன்னை முத்துமாரி யம்மனின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்தி எனது ஆசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை ~

**திருமதி. கலைவாணி இராமநாதன்**
**இந்து நாகரிகத்துறை**
**யாழ் பல்கலைக்கழகம்.**

சிறுதெய்வ வழிபாட்டிலே மாரியம்மன் வழிபாடு கிராமிய வழிபாடாக விளங்குகிறது. இதிகாச புராணங்களின் தோற்றுவாயாக ஆரம்பித்து பௌராணிகமரபில் இருந்து கிராமிய வழிபாடாகி ஆகம மரபுகளாக அறிவுசார் நிலையில் மாரியம்மன் வழிபாடு ஏற்றம் பெற்றமையினை ஆசிரியர் "அருள்வழங்கும் மாரியம்மன்" என்ற இந்நூலின் வாயிலாக எடுத்துக் கூறுகின்றார்.

மூல நூல்களை ஆராய்ந்து விடயங்களை வெளிப்படுத்தும் பாங்கு நல்ல முயற்சியாகும். இந்நூலாசிரியர் ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்கள் இந்து நாகரிகத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்றவர். தமிழ்மொழி வடமொழி இரண்டிலும் புலமை பெற்றவர். அவரது அறிவுத்துறைசார் புலமையினை அவரது நூல்களே அறிமுகம் செய்யும் பான்மை உள்ளவையாக விளங்குகின்றன.

வரலாறு, வழிபாடு, சமூகவியல் நோக்கு என்னும் மூன்று வகையில் மாரியம்மன் வழிபாட்டினைச் சுருக்கமாக ஆசிரியர் இன்றைய இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தும் பணி சிறப்பானதாகும். சமய ஞான வராலாற்று நூல்கள் அருகிய நிலையில் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் கிராமிய வழிபாடு பற்றி அறிவிக்கும் ஒரு நல்ல ஆவணமாக இந்நூல் அமைகின்றது.

இன்றைய உலகிலே விஞ்ஞானம் எத்தனையோ விந்தனைகளை வெளிப்படுத்திப் பொருளியல் உலகை ஆட்சி செய்கின்றது. எனினும் அம்பிகையின் அருளாட்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞ்ஞானத்தின் சக்தியை அதனால் வெல்ல முடியவில்லை என்பது அறிவியலாளர் பலரும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும்.

விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளால் இன்று உலகம் உள்ளங் கைக்குள் கணினியின் பிடிக்குள் அடங்கி விட்டது. விஞ்ஞானம், மெஞ்ஞானம் இரண்டின் இலக்கும் உண்மைப்பொருளின் தேடலேயாகும். ஆனால் விஞ்ஞானம் புறப்பொருள் ஆய்விலே மூழ்கி மக்கள் வாழ்வில் பௌதிக வளங்களைப் பெருகச் செய்கின்றது. மெய்ஞ்ஞானமோ அகப்பொருள் ஆய்விலே ஈடுபட்டு மனித மாண்பின் உயர் விழுமியங்களை, ஆத்ம ஞானத்தின் சக்தியினைத் தூண்டிவிட்டு மனிதர்களை ஆன்மநேயம் மிக்கவர்களாகவும் வளர்த்தெடுக்கப் பாடுபடுகின்றது. விஞ்ஞான அறிவினால் புற உலகினை வசப்படுத்தலாம். ஆனால் ஒருவரது ஆத்மாவை வசப்படுத்தி அகில உலகையும் தன்வசப்படுத்தும் சக்தியினை, சாந்தியை, உலக அமைதியை மெய்ஞ்ஞானமே உலகிற்கு வழங்க வல்லதாகும்.

இந்த உண்மைகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வேத சிவாகம நூல்களிலும் இதிகாச புராணங்களிலும் கண்டறியப்பட்டுள்ளன. அந்த அரிய உண்மைகளின் ஒரு சிறு துளியைச் சக்தி அலை என்னும் பெரும் அருள் வெள்ளமாக்கி ஆன்மீகத் தேடல்மிக்க அடியவர்களுக்கும், அன்பர்களுக்கும் அருள்வழங்கும் மாரியம்மன் என்னும் இந்நூலின் மூலம் நூலாசிரியர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

அவரது அருட்பணி மேலும் தொடரவும் இன்னும் பல அருள் நூல்களை வெளியிடவும் ஆதிசக்தியானவள் மென்மேலும் ஆசிவழங்கி அருள்வழங்க வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ



வ்யாப்தம் தயைதத் ஸகலம்
ப்ரஹ்மாண்டம் மனுஜேஸ்வர
மஹாகால்யா மஹாகாலே
மஹாமாரீ ஸ்வரூபயா
ஸைவ காலே மஹாமாரீ
ஸைவ ஸ்ருஷ்டிர் பவத்யஜா
ஸ்திதிம் கரோதி பூதானம்
ஸைவ காலே சநாதனீ

*- ஸ்ரீ தேவீ மஹாத்மியம்*
*அத்யாயம் 12. ஸ்லோகம் 38, 39*

*(பிரளய காலத்தில் மஹா ஸம்ஹாரிணியாய்த் தோன்றும் அந்த மஹா காளியால் இந்த ப்ரம்மாண்டம் முழுதும் வியாபிக்கப்பட்டுள்ளது.*

*பிரளய காலத்தில் மஹா மாரியாய் விளங்கும் அவளே, பிறப்பற்ற அவளே, சிருஷ்டியாகவும் ஆகின்றாள்.)*

"......... வாழ்க்கையில் இருக்கக் கூடிய எல்லாவித வியாதிகளையும் போக்கடித்து அருள்பாலிப்பவள் மாரியம்மன். சிவவழிபாடு, பெருமாள் வழிபாடு செய்பவர்கள்கூட மகா மாரியம்மனை வழிபட்டே ஆகவேண்டும்........... சக்திகளுக்கெல்லாம் சக்தியளிப்பவள் பராசக்தி. அந்தப் பராசக்தியின் அம்சமாக விளங்குபவள் மகாமாரியம்மன்."

- காஞ்சிப் பெரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- தோற்றுவாய்....................................................1

- இயல் ஒன்று....................................................5

இந்து நாகரிகத்தில் சக்திவழிபாடும் சக்தி தத்துவமும்.

- இயல் இரண்டு....................................................19

மாரியம்மன் வழிபாடு- தோற்றமும் வளர்ச்சியும்.

- இயல் மூன்று....................................................49

ஆகம வழிபாட்டு மரபில் மாரியம்மன்.

- இயல் நான்கு....................................................59

ஆகமம் சாரா வழிபாட்டு மரபுகளில் மாரியம்மன்.

- இயல் ஐந்து....................................................66

யாழ்ப்பாணக்குடா நாட்டின் மாரியம்மன் கோயில்களும் வழிபாட்டு முறைகளும்

- அநுபந்தங்கள்....................................................

1. மாரியம்மனின் பல்வேறு தியானங்கள்.......76
2. மாரியம்மனின் பரிவாரதேவதைகள்.............79
3. யாழ். குடாநாட்டிலுள்ள மாரியம்மன் கோவில்கள்.................81




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுவாய்

மாரியம்மன் வழிபாடு பற்றிய இவ்வாய்வு தன்னளவில் விரிந்து பரந்த ஒரு தளத்தைக் கொண்டிருக்கிறது. ஏனெனில் மாரியம்மன் என்ற வழிபடு தெய்வத்தின் தெய்வீக நிலைபற்றி ஆராயும்போது அதன் தோற்றம் வளர்ச்சி பற்றியும் வழிபாட்டுமுறைகள் பற்றியும் தத்துவச் செறிவு தொடர்பாகவும் மட்டுமன்றி இவ் வழிபாட்டுமுறையின் சமூகவியற் பெறுமானங்கள்பற்றியும் ஆராய்வது அவசியமானதாகிறது.

பொதுவாக இந்துநாகரிக மரபில் சிந்துவெளிக் காலம் முதல் இன்றுவரை சக்தி வழிபாடு பெற்றிருக்கும் முக்கியத்துவமும் சக்தி வழிபாட்டுமுறைகளுள் மாரியம்மன் வழிபாடு இடைக்காலம் முதல் சிறப்பான ஓரிடத்தைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

கல்வியறிவிற் குறைந்த மக்களால் வழிபடப்படும் கிராமியத் தெய்வமாக விளங்கும் அதே நேரத்தில் ஆகம நெறிமுறைப்படி சிவாசாரியப் பெருமக்களால் போற்றி வழிபடப்படும் பெருந் தெய்வமாகவும் ஒருசேர விளங்கும் பண்பினை மாரியம்மன் வழிபாட்டில் காணலாம்.

மாரியம்மன், முத்துமாரி, கருமாரி, ரேணுகாதேவி, சீதளாதேவி, கௌமாரி முதலிய பல பெயர்களாலும் போற்றப்படும் பெருமை கொண்ட சக்தியாக இவள் விளங்குவதை அவதானிக்கும்போது இவ் வழிபாடுகளுக்கிடையிலே காணப்படும் நுணுக்கமான சிலவேறுபாடுகளும் அடிப்படையில் காணப்படும் சில பொதுமைப் பண்புகளும் மாரியம்மன் வழிபாடுபற்றிய ஆய்வினை மேற்கொள்ளத் தூண்டுகின்றன.

உத்தர காரணாகமம் கூறும் மாரியம்மனும் கூர்ம புராணம், காஞ்சிப் புராணம் முதலிய புராணங்கள் கூறும் ரேணுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியும் காத்தவராயன் கதை கூறும் முத்துமாரியும் ஆகம வழிவந்த பத்ததிகள் பலவற்றில் காணப்படும் சீதளா கௌமாரியும் ஒரு சக்திதானா அல்லது வேறு வேறு சக்திகளா என்ற ஐயமும் எழுகின்றது.

முக்கண்ணுடைய தோற்றமும் உமாதேவியின் அம்சமாக விதந்துரைக்கப்படும் பாங்கும் இன்றும் பல பிராமணோத் தமர்களாலும் சைவப் பெருமக்களாலும் குலதெய்வமாக வழுத்தப்படும் சிறப்பும் வியக்க வைக்கும் அதேநேரத்தில் பலி கொடுத்தும் மது மாமிசங்கள் படைத்தும் வழிபடப்படும் நிலை சிந்திக்க வைக்கிறது. இத்தகைய பின்னணியில்தான் இந்த ஆய்வு ஆரம்பிக்கப்படுகிறது.

தமிழர் வாழும் இடமெங்கும் மாரியம்மன் வழிபாடு பொலிவு பெற்றிருக்கிறது. தென்கிழக்காசிய நாடுகளிலும் மேற்கைரோப்பிய நாடுகளிலும்கூட மாரியம்மன் வழிபாடு விரவிக் காணப்படுகிறது. மாரி என்ற சொல்லுக்கிணங்க மழையுடன் தொடர்புடையவளாகவும் சீதளா என்ற பெயருக்கிணங்க குளிர்மையைத் தருபவளாகவும் வெப்பம் சூட்டுநோய்கள் பஞ்சம் வரட்சி முதலியவற்றுக்கெதிரான செழுமை விளைவிக்கும் தெய்வமாகவும் இவள் விளங்குகிறாள்.

மிக உயர்நிலையிலிருந்து சாதாரண மக்களின் வாழ்க்கைவரை பரந்துபட்ட வழிபாட்டு மரபுகள் மாரியம்ம னுக்கிருந்தபோதிலும் இத்தெய்வ வழிபாட்டின் சரியான பின்னணி பற்றிய அறிவு மக்களிடையே மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

விநாயகர், முருகன் முதலிய உயர்நிலைத் தெய்வங்கள் பற்றியும் கண்ணகி, திரௌபதி முதலிய கிராமியத் தெய்வங்கள் பற்றியும் நிறையக் கதைகளையும் வழிபாட்டு முறைகளையும் பொதுமக்கள் தெரிந்துவைத்திருக்கும் அளவுக்கு மாரியம்மன் பற்றிய தகவல்களைத் தெரிந்துவைத்திருக்கவில்லை என்பது இவ்வாய்வின்போது புலப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ரீதியிலும் சமூகவியல் நோக்கிலும் அவதானிக்கும்போது சாதாரண மக்களால் கிராமிய அடிப்படையில் வழிபடப்படும் தெய்வங்கள் நாளடைவில் படிப்படியாகத் தரமுயர்த்தப்பட்டு ஆகம வழிபாட்டு முறைகளைப் பெறுவது மரபாகும். கிராமிய மரபு பௌராணிக மரபினுள் உள்வாங்கப்பட்டுப் பின் ஆகம மரபிற்குள் நிலைப்படுத்தப்படுகிறது எனக் கருதப்படுகிறது. ஆனால் மாரியம்மன் வழிபாட்டில் இதிகாச பௌராணிக மரபிலிருந்து ரேணுகாதேவி வழிபாட்டு முறை நேரே கிராமிய மரபு நோக்கிக் கீழிறங்கிவரும் போக்கு சற்று வியப்புடன் ஆவதானிக்கத்தக்க புதுமையான அம்சமாகும். நேரடியாக இவ்வழிபாடு ஆகம மரபுக்குள்ளும் உள்வாங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய போக்கு ஏன் ஏற்பட்டது என்பது சிந்திக்கத்தக்கது. பின்னாளில் இவ்விரு மரபுகளும் ஒருங்கே இணைக்கப்பட் டிருக்கலாமோ என்பதும் ஆய்வுக்குரியது.

மாரியம்மன் பற்றி அவ்வப்போது சிறு சிறு வெளியீடுகள் ஆங்காங்கே வெளியிடப்பட்டிருப்பினும் முழுமையான ஓராய்வு இதுவரை நிகழ்த்தப்படவில்லை. இக்குறையை ஓரளவு நீக்கி மாரியம்மன் வழிபாடுபற்றிய சகல தரவுகளையும் ஒன்றுகுவித்து ஆராயும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

இவ்வாய்வு ஐந்து இயல்களைக் கொணடதாகும். முதலாவது இயல் இந்து நாகரிக மரபில் சக்தி வழிபாடும் சக்தி தத்துவமும் என்ற தலைப்பில் அமைகிறது. இங்கு வரலாற்றடிப்படையில் சக்தி வழிபாட்டுமுறைகள் எவ்வாறு வளம் பெற்றன என்பதும் அவற்றின் தத்துவார்த்த உண்மைகளும் ஆராயப்படுகின்றன.

மாரியம்மன் வழிபாடு - தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பிலமையும் இரண்டாவது இயல் மாரியம்மன் என்ற தெய்வீக அம்சம் எங்கே தோற்றம்பெற்று எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிகண்டது என்பதை இலக்கிய மூலங்களின் அடிப்படையில் ஆராய்ந்து சமகால வழிபாட்டுமுறைகளையும் எடுத்துக் காட்டுவதாக உருவாக்கப்படுகிறது.

மூன்றாம் இயல் ஆகம வழிபாட்டு மரபில் மாரியம்மன் என்பதாகும். உத்தர காரணாகமம் கூறும் மஹாமாரிப் பிரதிஷ்டை முதல் இன்றைய நடைமுறையிலிருக்கும் கிரியாபத்ததிகள் வரை மாரியம்மன் வழிபாடு பற்றிக் கூறுபவற்றை இவ்வியல் ஆராய்கிறது

காத்தவராயன் கூத்தில் இடம்பெறும் மாரியம்மனை எடுத்துக்காட்டி ரேணுகாதேவியுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து காவடி, கரகம் முதலிய வழிபாட்டு முறைகளையும் பலிகொடுத்தல் முதலியவற்றையும் விபரிக்கும் நான்காவது இயல் ஆகமம் சாரா வழிபாட்டு முறைகள் என்ற தலைப்பில்இடம்பெறுகிறது.

ஐந்தாம் இயல் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல மாரியம்மன் கோயில்களுக்கும் நேரடியாகச் சென்று திரட்டிய உயிர்ப்புள்ள தகவல்களின் தொகுப்பாகும். இவ்வியல் யாழ்ப்பாணக் குடாநாட்டு மாரியம்மன் கோயில்களும் வழிபாட்டு முறைகளும் என்று பெயரிடப் பெறுகிறது.

இத்துறையில் மேற்கொண்டு ஆய்வுசெய்யும் ஆர்வலர்களுக்கு உதவும்பொருட்டும் தகவல்களை ஆவணப்படுத்தி வைப்பதன்பொருட்டும் சில அநுபந்தங்கள் இறுதியில் சேர்க்கப்படுகின்றன.



- கோப்பாய் சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இயல் 1*

# இந்து நாகரிகத்தில் சக்திவழிபாடும் சக்தி தத்துவமும்.

*வரலாற்று நோக்கு*

அகில உலகத்தையும் ஈர்த்து அகில உலகெங்கும் பரந்துநிற்கின்ற இந்து நாகரிக மரபு நீண்டகால வரலாற்றை உடையது. சிந்துவெளிக் காலத்திலேயே இந்து நாகரிகத்தின் வேர்களை ஆய்வாளர்கள் கண்டுகொள்கின்றனர். வேத இலக்கியங்கள் இந்து நாகரிகத்தின் முறையான அடித் தளங்களாக விளங்குகின்றன.

இந்து என்ற பதம் பிற நாட்டவர்களால் பிற்காலத்தில் வழங்கப்பட்டதெனினும் வேத இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு வேற்றுமைகள் பலவற்றில் ஒற்றுமை காண்பவர்களாகவும் முரண்பாடுகளில் ஒருமைப்பாடு காண்பவர்களாகவும் பன்மையி லிருந்து ஒருமை நோக்கிச் செல்பவர்களாகவும் அறிவுக் காற்றை எல்லாத் திசைகளிலிருந்தும் உள்வாங்கு வதற்காகப் பலகணிக் கதவுகளை அகலத் திறந்து வைத்திருப்பவர்களாகவும் காலந்தோறும் வளர்ந்துகொண்டிருக்கும் இந்துக்கள் சநாதனதர்மம் என்ற பெயராலும் வைதீகதர்மம் என்ற பெயராலும் சுட்டப்பட்டவர்களாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இவர்களுடைய பன்மையிலிருந்து ஒருமையை நாடிச் செல்லும்பண்பின் அடிப்படையில் காணப்படும் பல்லிறைக் கோட்பாட்டில் சக்தி வழிபாடும் சக்தி தத்துவமும் முதன்மை பெறுவதை நோக்கலாம். உலகெங்கும் வாழ்ந்துவரும் பல்வேறு நாட்டைச் சேர்ந்த பல்வேறு மொழிபேசும் பல்வேறு இன மக்களும் சக்தி வழிபாட்டை மேற்கொள்பவர்களாக இருக்கின்றனர். தாய்த் தெய்வ வழிபாடு, தரைப்பெண் வழிபாடு, இயற்கை அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு என்று பல்வகைப்பட்ட முறையில் இந்த சக்திவணக்கம் பரவி விரவிக் காணப்படுகிறது.

*சிந்துவெளிக் காலத்தில்-*

மானிடவியலாளர்கள் பெண்வழிச் சமுதாய அமைப்பே ஆதியானதென்றும் அதன்பின்னரே ஆண்வழிச் சமுதாய அமைப்புத் தோன்றியதென்றும் கூறுவர். இத்தகைய தொன்மைப் பெருமை பெற்ற தாய்வழிச் சமுதாய அமைப்பில் அன்னை வழிபாடு பிரபலமடைந்திருந்தது ஆச்சரியமன்று எனப் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள் கூறுவது இங்கு கருதத்தக்கது.

தொல்பழங்கால நாகரிகங்களான சுமேரிய, எகிப்திய நாகரிகங்களை விளக்கும் தொல்பொருளாய்விலும் இத்தகைய சக்தி வழிபாட்டுச் சின்னங்களை அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஐரோப்பாவிலும் பழைய காலத்திலே இனவிருத்தியின் சின்னமாகக் கருதப்படும் பெண் பாவைகள் தாய்த்தெய்வ வழிபாட்டின் சான்றுகளாகக் காணப்படுகின்றன. சிந்துவெளியிலும் அதற்கு முற்பட்ட சோப், குல்லி முதலிய நாகரிகங்களிலும் சுடுமண் பெண் பாவைகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்துக்களிடம் நிலவியதுபோல வேறெந்த நாட்டிலும் தாய்த்தெய்வ வழிபாடு பழமையாகவும் ஆழமாகவும் நிலைத்து நிற்கவில்லை என்பது சேர் ஜோன் மாஷலின் கருத்து.

*ரிக்வேத காலத்தில்-*

ஆரியர்கள் ஆண்வழிச் சமுதாய மரபினைக் கொண்டிருந் தமையாற்போலும் அவர்களிடையே தாய்த்தெய்வ வழிபாடு அதிக முக்கியத்துவம் பெறவில்லை. எனினும் ரிக் வேதத்திலேயே சக்தி வழிபாட்டுக்கான மூலங்கள் சிலவற்றைக் காணமுடிகிறது. இயற்கைச் சக்திகள் யாவுமே தெய்வங்களாகப் போற்றப்படுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை ரிக் வேதத்தில் காண்கிறோம். அங்கு முப்பத்து மூன்றுக்கு மேற்பட்ட தெய்வங்கள் வணங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவற்றில் பல தெய்வங்கள் பெண்தெய்வங்களாக இருக்கின்றன. உஷை, ராத்ரி, ராகா, சினிவாலி, குங்கு, அதிதி, பிருதுவி, திதி, சுவஸ்தி, பிருஷ்ணி, புரம்தி, அனுமி, ஆப்தேவிஸ், சரஸ்வதி, வாக், ஆன்யானி, இந்திராணி, வருணானி, சசி, ரோதசி, சீதா, ஊர்வரா, ஆரணி, சிராத்த, திஷனா, ஈள, நிருதி, குன்றிதா, சூர்யா ஆகிய பெண்தெய்வங்கள் வேதகால மக்களால் போற்றி வழிபடப்பட்டமைக்கு ரிக் வேதப்பாடல்கள் சான்று பகருகின்றன. தேவீ சூக்தம், துர்க்கா சூக்தம் ஆகிய வேதப் பாடல்களும் இங்கு குறிப்பிடத்தக்கன.

வாஜசநேயி சம்ஹிதை அம்பிகா பற்றிக் குறிப்பிடுகிறது. தைத்திரிய உபநிடதம், முண்டக உபநிடதம் என்பவற்றில் துர்க்கா, காத்யாயனி, கன்யாகுமரி முதலிய தெய்வங்கள் பற்றிக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கேந உபநிடதம் முழுமையாக சக்தி வழிபாடு பற்றிக் குறிப்பிடுகிறது.

*பிற்பட்ட வேத காலம்-*

ஆரியர்கள் கங்கைச் சமவெளியில் பரந்து ஆரியாவர்த்தத்தை அமைத்துச் சுதேசி மக்களுடன் கலந்த பின்னர் ஏற்பட்ட பண்பாட்டு மலர்ச்சி இவர்களின் வழிபாட்டு முறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இக்காலத்தில் வெளிப்படுத்தப்பட்டவை எனக் கருதப்படும் வேதப்பாடல்களில் துர்க்கா, உமா, அம்பிகா, காளி முதலிய பெண்தெய்வங்கள் போற்றப்படுகின்றன.

*இதிஹாச புராண காலம்*

இதையடுத்த இதிஹாச புராண காலங்களில் பார்வதி, இலக்குமி, சரஸ்வதி போன்றோர் முன்னணிக்கு வருவதைக் காணலாம். இப்பெண்தெய்வங்கள் பல சந்தர்ப்பங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவம் வாய்ந்த தனி வழிபாட்டைப் பெறுவனவாக உயர்நிலை பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கங்கை, யமுனை முதலிய நதிகளும் சில நாகங்களும் பெண்தெய்வங்களாகப் போற்றப்பட்டன.

இதிஹாச புராணங்கள் தோன்றி வளர்ந்த காலமாகக் கருதப்படும் மௌரியர் - குப்தர் காலங்களில் வடஇந்தியப் பிரதேசங்கள் பலவற்றில் இலக்குமிக்கான கோயில்கள் இருந்தமையும் நாணயங்களில் இத்தெய்வ உருவம் பொறிக்கப்பட்டிருந்தமையும் தொல்பொருளாய்வினால் நிரூபிக்கப் படுகின்றன.

குப்தர் காலத்தில் திரிமூர்த்திக் கோட்பாடு முதன்மை பெற்றதுபோலவே அர்த்த நாரீஸ்வர வழிபாடும் முக்கியத்துவம் பெற்றிருக்கலாம். சிவத்திலிருந்து பிரியாத சக்தியாக சிவத்துக்கு இணையாக அம்பிகையைக் கருதிப் பிரார்த்திக்கும் பாடலாக

*"வாகர்த்தாவிவ சம்ப்ருக்தௌ வாகர்த்தப் ப்ரதிபத்தயே*
*ஜெகத பிதரௌ வந்தே பார்வதீ பரமேஸ்வரௌ"*

என்ற செய்யுள் காளிதாச மஹாகவியால் இயற்றப்பட்டிருக்கிறது.

'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'

என்ற சைவ சித்தாந்த நூற்கருத்தும்

'சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்'

என்ற பிற்காலத் தோத்திர நூலாகிய அபிராமி அந்தாதிக் கருத்தும் இங்கு ஒப்பிட்டு நோக்கற்பாலன.

இராமாயண இதிஹாசத்தின் கதா நாயகியாகிய சீதையும் மஹாபாரத இதிஹாசத்தின் கதாநாயகியாகிய திரௌபதியும் பிற்காலத்தில் பெண்தெய்வங்களாகப் போற்றப்படுகின்ற இயல்பும் இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியை முதன்மைப்படுத்தி அவளது அற்புதம் மிகுந்த வீர தீரச்செயல்கள் அருட்செயல்கள் என்பவற்றை விளக்கும் தனி நூலாக *தேவீ பாகவதம்* விளங்குகிறது. சக்தியின் பல்வேறு தோற்றங்கள் அவற்றுக்கான காரணங்கள் பௌராணிக மரபில் அவை தொடர்பான கதைகள் என்பவற்றை இந்நூலில் காணலாம்.

மார்க்கண்டேய புராணத்தில் இடம்பெறும் தேவீ மஹாத்மியம் என்ற பகுதியும் சக்தியின் பல்வேறு தோற்றப் பொலிவுகளையும் வீர தீரச் செயல்களையும் விளக்குகிறது. எழுநூறு சுலோகங்களைக் கொண்ட இந்நூல் துர்க்கா சப்தசதீ எனப் போற்றப்படுகிறது. சக்தி உபாசகர்களுக்கு இது ஒரு சிறந்த பாராயண நூலாக விளங்குகிறது.

### *தமிழ் இலக்கிய மரபிலே..........*

தமிழ் இலக்கியங்களிலும் தமிழ் மக்களின் வாழ்விலும் தொன்றுதொட்டே சக்தி வழிபாடு பின்னிப் பிணைந்திருக்கிறது. நிலப் பிரிவுகளுக்கேற்ப இயற்கையோடு இணைந்த வாழ்க்கையையும் வழிபாட்டையும் கொண்டிருந்த சங்கத் தமிழ் மக்கள் பாலை நிலத் தெய்வமாகக் கொற்றவையை வழிபட்டனர்.

போர்த்தெய்வமாக விளங்கிய கொற்றவையைப் பாலை நிலத்தவர் மட்டுமல்லாமல் வீரம் மிகுந்த தமிழ் மக்கள் அனைவருமே வழிபட்டனர். பழையோள் எனச் சுட்டப்படும் அவளது பெயரே கொற்றவையின் தொன்மையை நிரூபிக்கிறது. கோதை, மோடி என்ற பெயர்களாலும் இவள் வழிபடப்பட்டமை பல்லவர் காலத் தேவாரங்களின் மூலம் அறியமுடிகிறது.

குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன் கொற்றவையின் மைந்தனாகவே கொள்ளப்பட்டான். இதனை நக்கீரர்,

'வெற்றி வேல் போர்க் கொற்றவை சிறுவ'

எனக் கூறுவதன்மூலம் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையொரு பாகங்கொண்ட சிவனையும் சங்க நூல்கள் குறிப்பிடுவதனால் உமா என்ற சக்தியையும் அவர்கள் அறிந்து போற்றினர் எனக்கொள்ளமுடியும். நீலமேனி வாலிழை பாகத் தொருவன் என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களை நோக்கும்போது வேறுபல பெண் தெய்வங்கள் பற்றியும் அறியலாம். நகரங்களின் காவல் தெய்வங்களாக இருந்த பெண் தெயவங்கள் பற்றிய குறிப்புக்கள் அங்கு கிடைக்கின்றன. இலக்குமி, துர்க்கை என்போர் பற்றியும் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

மாமகளு நாமகளு மாமரிடர் சென்றுகந்த
கோமகளுந் தாம் படைத்த கொற்றத்தாள் -நாம
முதிரா முலை குறைத்தாள் முன்னரே வந்தாள்
மதுரா பதி என்னும் மாது

சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம் 22ஆவது வெண்பாவாகிய இப்பாடல் பெண் தெய்வங்கள் பற்றியும் தெளிவுபடுத்துகின்றது. மதுரையாகிய நகரம் ஒரு பெண் தெய்வமாகவே உருவாக்கம் பெறுவதைக் காணமுடிகின்றது.

மணிமேகலை சம்பாபதி என்ற காவல் தெயவம் பற்றியும் கூறுகின்றது. காடமர் செல்வியாகிய காளி சுடுகாட்டில் உவந்திருத்தல் பற்றியும் தெரிவிக்கப்படுகின்றது. இங்கு கூறப்படும் சக்கரவாளக் கோட்டம் என்பது அம்பிகையின் சக்கர வழிபாட்டின் தொடர்புடைய ஒன்றாக இருக்கக்கூடும் என ஐயுறும் சில அறிஞர்களின் கருத்தையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது. பழைய சாக்த இலக்கியங்களில் விந்தியா வாசினி என்ற தெய்வம் பற்றியும் காணப்படுகின்றது.

பத்தினிப்பெண் வழிபாடும் இத் தொடர்பில் சிந்திக்கத்தக்கது. பத்தினிப் பெண்களைத் தெய்வீகம் நிறைந்தவர்களாக திருவள்ளுவர் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.'

என்ற குறள் இங்கு நினைவு கூரத்தக்கது.

பிற்காலப் புலவர்களில் பாரதியார் ஒரு சக்தி உபாசகராக இருந்தவர். சக்தி மகிமை பற்றிப் பல்வேறு பாடல்களில் அவர் கூறுவதைக் காணலாம். ருஷ்ய புரட்சி பற்றிப் பாடும்போதுகூட,

'மாகாளி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள்'

என்று பாடுகிறார்.

'சக்தி சக்தி சக்தி என்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு'

என்றும் அவர் பலவாறு பாடுகின்றார்.

*ஈழத்தின் தொன்மைக் காலம்.*

பழைய ஈழநாட்டில் பல்வேறு நிலைகளில் சக்தி வழிபாடுகள் பேணப்பட்டமையை அறிஞர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். தொல்பொருளாய்வில் பல சுடுமண் பெண் பாவைகள் கிட்டியுள்ளன.

யக்ஷர்களால் தாய்த்தெய்வவழிபாடு பின்பட்டப்பட்டது. பழைய யக்ஷி வழிபாட்டின் எச்ச சொச்சங்களைப் பிற்காலப் பௌத்தர்களின் வழிபாட்டில் காணலாம். சேத்திய யக்ஷி என்னும் தெய்வம் பௌத்த பீடங்களில் போற்றப்படுகின்றது.

பண்டுகாபய மன்னன் காலத்திலேயே யக்ஷிவழிபாடு இருந்திருக்கின்றது. அநுராதபுர நகரத்தின் தெற்கு வாசலில் சித்த என்ற யக்ஷியும், மேற்கில் பச்சிமராஜினி என்ற யக்ஷியும் அவனால் காவல் தெய்வங்களாக அமைவிடம் அமைத்துப் போற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு புறத்தில் ஈழத்தின் பழங்குடி மக்களான நாகர்கள் நாகினி வழிபாட்டைக் கொண்டிருந்தனர். இதன் எச்சமே இன்று சிறப்பொடு விளங்கும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் வழிபாடாகும். இவ்வாலயம் மணிமேகலை என்ற பழந்தமிழ் இலக்கியத்துடன் தொடர்படையதாக இருப்பதுடன் சக்திபீடங்கள் 64 இனுள் ஒன்று எனவும் கருதப்படுகின்றது. இதற்கு ஆதாரமான தகவல்கள் யாமளாதண்டகம், பிரபஞ்சவுற்பத்தி என்ற நூல்களுள் கிடைத்திருக்கின்றன.

ஈழத்தில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் துர்க்கை பற்றிய குறிப்புகள் உண்டு. லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்கள் சிலவும் தொல்பழங் காலத்தனவாகக் கிடைத்துள்ளன.

*படிமுறை வளர்ச்சி*

இவ்வாறு பாரதத்தின் வடக்கிலும் தெற்கிலும் மிகப் பழங்காலத்திலிருந்தே ஆரியர்களாலும், திராவிடர்களாலும் போற்றிப் பேணப்பட்டு வந்த சக்தி வழிபாட்டு மரபு ஈழத்திலும் நீண்டகாலமாகப் போற்றிப் பேணப்பட்டு வருகின்றது.

இந்த மரபுமுறை காலத்திற்குக் காலம் ஏற்பட்டுவந்த சிந்தனையாளர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பப் பல்வேறு படித்தரங்களில் பல்வேறுவிதமாக உருமாற்றம் பெற்று வந்திருகின்றது. வடக்கும் தெற்கும் இணைந்த நிலையில் ஆரிய திராவிட நாகரிகங்கள் கலந்து பல்வேறு தெய்வ வழிபாட்டு முறைகள் ஒப்பீட்டடிப்படையில் ஒற்றுமை காணப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டது போலவே சக்தி வழிபாட்டின் பல்வேறு பரிணாமங்களும் ஞானிகளால் ஒப்பு நோக்கி இணைக்கப்பட்டன

பல்வேறு தத்துவ சிந்தனைகள் புதிது புதிதாகக் கிளர்ந்தெழுந்து அவற்றின் அடிப்படையில் பல்வேறு சமய வழிபாட்டு மார்க்கங்கள் உருவாக்கம்பெற்று வழிபாட்டுநெறி, வாழ்க்கை நெறி, கலைமரபு, தத்துவசிந்தனை என்பன யாவும் ஒருங்கிணைக்கப்படும் நிலையில் பரம்பொருளாகிய பரமாத்மாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரருட்சக்தியான கருணைப் பிரவாகமே சக்தி என்னும் உயர் ஞான விளக்கம் சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்டது.

எல்லாச் சமயநெறியாளர்களும் தத்தமது இறைமை மிக்க பெருந்தெய்வத்தின் அருட்சக்திக்குத் தாய்மைப் பண்பைக் கொடுத்துப் பெண்வடிவமாக உருவம் கொடுத்து வழிபடுகின்ற நிலை இந்து நாகரிகமரபின் இணையற்ற சக்தி தத்துவமாக எழுச்சி கண்டது.

நிவர்த்தி மார்க்கம் மட்டுமன்றிப் பிரவிருத்தி மார்க்கமும் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும் என நம்பிச் செயற்படுகின்ற சைவம், வைணவம் முதலிய பெருநெறிச் சமய வழிபாட்டு முறைகளில் அன்பின்வழி தொடரும் அருமந்த நல்லறமாகிய இல்லற வாழ்க்கையிலிருந்து இனிய கடமைகள் இயற்றியவாறே இறையின்பத்தில் ஈடுபட்டு இலயிப்பதற்கு இந்த சக்தி தத்துவம் இனிய அடிநாதமாகின்றது.

*அறுவகைச் சமயநெறிகள்.*

வைஷ்ணவ மரபிலே மஹாவிஷ்ணு என்னும் ஸ்ரீமந் நாராயண பரப்பிரமத்தின் சக்தியாகிய மஹாலக்ஷ்மித் தாயார் பெரிய பிராட்டியார் என அழைக்கப்பட்டு வழிபடப்படுகின்றாள். சேஷித்வம் (நாராயண பரம் பொருள் தவிர்ந்த அனைத்தையும் தனக்குடைமையாக ஆளுதல்) புருஷகாரம் (ஆன்மாக்களுக்குப் பரிந்துரை செய்தல்) ஆகிய வைஷ்ணவ மரபுகளே அங்கு காணப்படும் சக்திவழிபாட்டின் பெருமைக்கு எடுத்துக்காட்டு.

காணாபத்திய நெறியில் கணபதி பிரமச்சாரி என்ற கருத்துநிலைக்கு அப்பால் வல்லபாம்பா சமேத விக்கினேஸ்வரர் என்றும் சித்தி புத்தி விநாயகர் என்றும் சக்திகளோடு போற்றப்படும் நிலை கவனிக்கத்தக்கது.

கௌமாரநெறியிலே இச்சை, கிரியை இரண்டும் பெண்வடிவமாக்கப்பட்டு குமரப் பெருமானுடன் கூடிய சக்திகளாக வள்ளி, தெய்வயானை என்று வணங்கப் பெறுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌர நெறியிலே சூரியனின் மனைவியராக சாயா, சம்ஜ்ஞா அல்லது உஷா, பிரத்யுஷா ஆகியோர் உருவகிக்கப்படுகின்றனர்.

சைவ சித்தாந்தத்திலே மற்றெல்லா மதநெறிகளையும் கடந்த நிலையில் சக்தியானவள் உயர்தனிச் சிறப்பைப் பெறுகிறாள்

'அருளது சக்தியாகும் அரன்தனக் கருளையின்றி
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சக்தியில்லை'

'சிவம் சக்தி தன்னையீன்றும் சக்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திருவரும் புணர்ந்திங் குலகுயிரெல்லா மீன்றும்'

என்றும் அருணந்தி சிவாச்சாரியார் சக்தியின் பெருமையைக் கூறுகின்றார்.

'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'

என்று உமாபதி சிவாச்சரியார் கூறுவதற்கிணங்கப் பரசிவத்துடன் பிரிவின்றிக் காணப்படும் பராசக்தி,

'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்'

என அருணந்தி சிவாச்சாரியார் கூறியதற்கு இணங்கப் பல்வேறு வடிவங்கள் தாங்கி நிற்கின்றாள்.

நவந்தரு பேதங்கள் என்ற நிலையில் பரசிவத்தின் அடுத்த நிலையில் நிற்கும் பராசக்தியானவள் படிப்படியாகக் கிழிறங்கி மனோன்மனி, மகேஸ்வரி, உருத்திராணி, நாராயணி, பிராமி, (பிரம்மாணி) என்ற வடிவங்களைப் பெற்றுப் பஞ்சகிருத்தியங்களை ஆற்றத் துணை செய்கின்றாள்.

சிவாகம மரபில் கூறப்படும் இதே சக்தியை கௌரி, பாலா, திரிபுரசுந்தரி, உமா, மீனாக்ஷி, புவனேஸ்வரி, துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி, அபிராமி, மஹாமாரி, சாமுண்டி, காளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டி, என்றிவ்வாறு பல்வேறு தோற்றங்களில் வழிபடுகின்றனர் சக்தி உபாசகர்கள்.

சிவாகமங்கள், இத்தகைய சக்தித்திருவுருவங்கள் பலவற்றை உருவாக்கும் முறைகள் பற்றியும் பிரதிஷ்டை மற்றும் வழிபாட்டுமுறைகள்பற்றியும் விரிவாக எடுத்துரைக்கின்றன.

சிவாகமங்களின் சாரத்தை எடுத்துத் தனித்தனியே விரித்துரைத்த நூல்களான சிற்ப சாஸ்திர நூல்களும், கிரியா பத்ததி நூல்களும் முறையே அம்பிகையின் திருவுருவங்களை வடித்தெடுக்கும் நியதிமுறைகள் பற்றியும் அவற்றைப் பிரதிஷ்டை செய்து ஆராதனை செய்வது பற்றியும் விளக்கி நிற்கின்றன.

*சாக்த நெறிமுறையில்...........*

இவை ஒரு புறமிருக்க, சக்தியே பரம்பொருளென்று சாதித்து அதன் தனித்துவமான வழிபாட்டுநெறிகளை விரித்துக்கூற எழுந்தவை சாக்த தந்திரங்களாகும்.

சுபாகம பஞ்சகம் எனப்படும் சாக்த தந்திரங்களான வசிஷ்ட சம்ஹிதை, சனக சம்ஹிதை, சனந்தன சம்ஹிதை, சனற்குமார சம்ஹிதை, சுக சம்ஹிதை ஆகிய ஐந்தும் வித்யா உபாசனை என்னும் சமய மார்க்கமான சக்தி வழிபாட்டு முறைகளை வகுத்துக் கூறுகின்றன. தக்ஷிணாசாரம் என இம்மார்க்கம் அழைக்கப்படும். வாமாசாரம் எனப்படும் கௌலமார்க்க முறைகளை எடுத்துரைப்பனவாக வேறு அறுபத்துநான்கு தந்திரங்கள் உள்ளன. (குலார்ணவதந்திரம், மஹாநிர்வாண தந்திரம் முதலியன.)

இவற்றைவிட, இவற்றின் இணைப்பினால் சம்மேளன மார்க்கமாகக் கூறப்படும் மிஸ்ரமார்க்க தந்திரங்களான எட்டுத்தந்திரங்களையும் சேர்த்து எழுபத்தேழு தந்திரங்கள் சக்திவழிபாட்டின் ஆதார நூல்களாக உள்ளன. சாக்த நெறியினர் வேதங்களைப் பொது நூலாகவும் இத் தந்திரங்களைச் சிறப்பு நூல்களாகவும் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாக்ஷரீ, பஞ்சதசாக்ஷரீ, ஷோடசாக்ஷரீ முதலிய உபதேச மந்திரங்கள் சக்தி உபாசனைக்குரிய மந்திரங்களாகும்.

*ஸ்ரீ சக்கர வழிபாடு.*

ஸ்ரீ சக்கரம் என்பது சக்தியை வழிபடப் பயன்படும் சிறப்பான யந்திரமாகும். நவாவரணம் எனப்படும் ஒன்பது ஆவரணங்களை ஒன்பது பீடங்களாக கொண்ட நாற்பத்து முக்கோணங்களைக் கொண்ட இந்த சக்ரராஜம் எனப் போற்றப்படும் ஸ்ரீ சக்கரமானது ஒரே பரிமாணமாகத் தகட்டிலே அமைக்கப்படும் பூபிரஸ்தாரமாகவும் முப்பரிமாணமாக அமையும் அர்த்த மேருவாகிய கைலாசப் பிரஸ்தாரமாகவும், அதே முப்பரிமாண நிலையில் அமையும் மேருபிரஸ்தாரமாகவும் மூன்று நிலைகளில் உருவாக்கப்படும்.

மகாமேரு மலையின் மூன்று சிகரங்களின் மத்தியில் அமைந்த ஸ்ரீநகரமென்னும் தேவியின் வாசஸ்தலத்தில் இந்த ஸ்ரீ சக்கரம் அமைந்திருப்பதாகப் பாவித்து 64 குப்த யோகினிகள், பிரகட யோகினிகள், சக்கரேஸ்வரிகள் முதலிய பரிவார சக்திகள் சகிதமாக அந்த ஸ்ரீசக்கர மத்தியிலுள்ள பிந்துஸ்தானமென்னும் சர்வானந்தமயபீடத்தில் காமேஸ்வரனது மடியில் அமர்ந்திருப்பவளாக பராபட்டாரிகா சக்தியைப் பூஜிப்பதே ஸ்ரீவித்யா பூஜையின் தாத்பரியமாகும்.

இங்கு தந்திர நூல்களின் அடிப்படையில் மந்திரங்களைப் பயன்படுத்தி யந்திரத்தில் பூசிப்பது என்பதனால் தந்திர-மந்திர-யந்திர - வழிபாடு இது எனக்கூறப்படும்.

*சக்தி உபாசகர்களும் சக்தி வழிபாட்டு நூல்களும்.*

சக்தி உபாசனையில் திளைத்து மகிழ்ந்து பேரின்பநிலை எய்தியவர்களாக துர்வாசர், அகஸ்தியர், லோபாமுத்திரை, ஹயக்ரீவர், ஸுகர், தத்தாத்திரேயர், காளிதாசர், கம்பர், அபிராமிப்பட்டர், குமரகுருபர சுவாமிகள் முதலியோரைக் குறிப்பிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி மஹாத்மியம் என்னும் சப்தசதி, லலிதாத்விசதி என்னும் ஸ்தவரத்னம், லிலதா த்ரிசதி, லிலதா சகஸ்ரநாமம், தேவி உபநிஷத், பாவனோபநிஷத், தேவீ பாகவதம், சௌந்தர்யலஹரீ, அபிராமி அந்தாதி, மதுரை மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ் (குமரகுருபரசுவாமிகள்), சரஸ்வதி அந்தாதி (கம்பர்), முதலியனவும் ஸ்யாமா சாஸ்திரிகள், மற்றும் முத்துசுவாமி தீக்ஷிதர் முதலியோரின் கீர்த்தனைகளும் பாரதி பாடல்களும் சக்தி உபாசகர்களுக்கு உதவும் சமஸ்கிருத, தமிழ்ப் பிரார்த்தனை நூல்களாகும்.

தத்தாத்திரேய சம்ஹிதை, பரசுராமகல்பம், உமாநந்தரின் நித்யோத்ஸவம், பாஸ்கராயரின் வரிவஸ்யாரகஸ்யம், என்பன சாக்த வழிபாட்டைவிளக்கும் பத்ததி நூல்களில் முக்கியமான சிலவாகும்.

## கிராமியமரபில்:

இத்தகைய ஆகம நெறிமுறைப்படுத்தப்பட்ட சாக்த வழிபாட்டு முறைகளைவிட பக்தி மார்க்கமான கிராமிய வழிபாட்டு முறைகளிலும் சக்தி வழிபாடு நிலை பெற்றிருக்கின்றது. சமூவியலாளர் கருத்தின்படி இந்த வழிபாடே தொன்மையானதாகும். உருவங்கள் வைத்தோ அன்றி வெறும் அடையாளச் சின்னமான சூலம் அல்லது கல் போன்றவற்றை வைத்தோ அல்லது எதுவும் இல்லாமல் வெறும் மரநிழலிலோ அம்பிகையை நினைத்துப் பொங்கல், படையல், குளிர்த்தி, பலி , முதலியவற்றுடன் வழிபட்டுச் சாமி ஏறப் பெற்று உருஆடல் முதலியவற்றுடன் வழிபடும் இந்தக் கிாமிய முறை பாமர மக்களால் விரும்பி அனுசரிக்கப்படுகின்றது.

இம்முறையில் முத்துமாரி, எல்லையம்மன், நாச்சிமார், சுடலையம்மன், கண்ணகை, திரௌபதி முதலிய தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இவ்வழிபாட்டு முறையிலிருந்து பலியிடும் வழக்கம் அறிவுசார் நிலையில் படிபடியாக விலக்கிக் கொள்ளப்பட்டது.



- கோப்பாய் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுத் திருவுருவங்கள் வைத்துக் கட்டடங்கள் கட்டி ஆகம வழிபாட்டு முறையாகத் தரமுயர்த்தப்பட்ட ஆலயங்கள் அநேகம்.

இரண்டும் கலந்த முறையில் அதாவது ஆகமரீதியில் தரமுயர்த்திக் கோயில் கட்டித் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டபின் அவ்வப்போது ஆகமரீதியான நைமித்திக பூஜைகள் நடைபெற, மற்றும்படி நாளாந்தம் பொங்கல், படையல்களும், ஆடல் பாடல்களும் கூட்டுப்பிராத்தனையும், நடைபெறும் ஆலயங்களும் உண்டு.

கிராமிய மரபிலமைந்த அம்மன் கோயில்கள் பல இருப்பது மட்டுமல்லாமல் வைரவர், அண்ணமார், காத்தவராயன், சுடலைமாடன், கருப்பண்ணசாமி, முதலிய கோயில்களிலும் அருகிலேயே இன்னொரு சூலம் அல்லது கல்வடிவில் சக்தியை வழிபாடு செய்வதை அவதானிக்கலாம்.

இவ்வாறு எவ்வகையில் நோக்கினாலும் நமது இந்து நாகரிக மரபில் சக்தி வழிபாடும் சக்தி தத்துவமும் இணைபிரியாது பொருந்தியிருப்பதோடு மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் இருப்பதை மறுக்க முடியாது



- கோப்பாய் சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இயல் - 2*

# மாரியம்மன் வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்

## *பௌராணிக மரபில் சக்தி*

இந்து சமய வழிபாட்டு மரபில் சக்தி வழிபாடு பெறும் முக்கியத்துவத்தை நோக்கினோம். சக்தி என்ற பெருந்தத்துவம் பல்வேறு விதமாகப் பரந்து விரிந்து காணப்படுகிறது. இறை பரம் பொருளிலிருந்து பிரிக்க இயலாத பேரருட் சக்தியைப் பல்வேறு வடிவங்கள் கொடுத்துப் பல்வேறு பெயர்கள் சூட்டி வழிபடலாயினர்.

பௌராணிக மரபு சக்தி வழிபாட்டின் பல்வேறு கிளைத் தோற்றங்களுக்கு வழிவகுத்தது. பக்தர்களின் துயர் போக்குவதற்காகவோ வேறு சில தெய்வீகக் காரணிகளுக்காகவோ சக்தி பல்வேறு அவதாரம் எடுத்துப் பூவுலகிலும் தேவருலகிலும் அருள் செய்த கதைகள் புராணங்களில் விரித்துக் கூறப்படுகின்றன. பதினெண் மகாபுராணங்களிலும் உபபுராணங்களிலும் இன்னும் பல தமிழ்ப் புராணங்களிலும் இத்தகைய கதைகள் பல விரவிக் காணப்படுகின்றன.

'ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் நின்றாள்'

என்று அபிராமிப்பட்டர் கூறும் தத்துவ விளக்கத்தின் அடிப்படையில் இப்பௌராணிக மரபு விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இப்புராணக் கதைகளில் பல கற்பனைத் தன்மை கொண்டவையாகவும் நம்ப முடியாதவையாகவும், அருவருக்கத் தக்கவையாகவுங் கூடக் காணப்படுகின்றன. சமய நம்பிக்கையும் தத்துவ உணர்வும் இருக்குமானால் இக்கதைகள் புலப்படுத்தும் பேருண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *இருசார் நிலைப்பாடுகள்*

இவ்வடிப்படையில் பலவாக விரிந்து காணப்படும் சக்தி வழிபாட்டில் இருவகைப் பாரம்பரியங்களை நாம் அவதானிக்கலாம். ஒன்று பாமரமக்களின் நம்பிக்கைகளால் வளம் பெற்று வரும் முறை. மற்றது வேத, சிவாகம நெறிமுறையில் கட்டுக் கோப்பான ஒழுங்கு முறைகளுடன், ஆசாரிய பாரம்பரியத்தில் பேணப்பட்டு வருவது.

பிடாரி, கண்ணகி, காளி, எல்லையம்மன், திரௌபதியம்மன் முதலியன முதல்வகை வழிபாட்டுக்கு உதாரணங்களாகும்.

ராஜராஜேஸ்வரி, காமாக்ஷி, சிவகாமி, மீனாக்ஷி முதலிய வழிபாடுகள் இரண்டாவது வகைக்கு உதாரணங்களாகும்.

மாரியம்மன் வழிபாடு இவ்விருவகை வழிபாடுகளையும் இணைத்துச் செல்வதாக அமைந்திருக்கிறது.

பாமர மக்களின் பொங்கல், குளிர்த்தி வழிபாடுகளை ஏற்றருளும் கிராமியத் தெய்வமாக மிளிரும் அதே நேரத்தில் ஆகம நெறி முறைப்படி அமைந்த உயர்நிலைத் தெய்வமாகவும் விளங்கும் நிலையை மாரியம்மன் வழிபாட்டில் நாம் காணலாம். மாரியம்மன், மாகாமாரி, கருமாரி, முத்துமாரி முதலிய பல பெயர்களால் அழைக்கப்படும் இம்மூர்த்தம் காளி, துர்க்கை என்பனபோல் ஒரு கோரமூர்த்தமாகவே இருப்பினும் சாந்தவடிவினளாகவும் போற்றப்படுகின்றாள்.

மாராசுரனை வதம் செய்தவள் என்ற கருத்து ஆகம நெறிமுறையில் பேசப்படுகிறது.மாரியாயி, ஆத்தா, மகமாயீ, முத்தாயி, முத்தாச்சி என்றெல்லாம் இந்த தெய்வத்தைப் பாமர மக்கள் அழைத்து வழிபடுவர். சீதளாதேவி, சீதளாகௌமாரி, ரேணுகாதேவி என்ற பெயர்களால் புராண ஆகம நூல்கள் இத்தேவியைப் போற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் இருசார் நிலைப்பாடுகளுக்கும் பொருத்தமானவளாக, இரு வழிபாட்டு முறைகளையும் இணைப்பவளாக இருக்கும் மாரியம்மனைப்பற்றிக் காஞ்சி முனிவர் கூறுவதை நோக்கலாம்.

"......... வாழ்க்கையில் இருக்கக் கூடிய எல்லாவித வியாதிகளையும் போக்கடித்து அருள்பாலிப்பவள் மாரியம்மன். சிவவழிபாடு, பெருமாள் வழிபாடு செய்பவர்கள்கூட மகா மாரியம்மனை வழிபட்டே ஆகவேண்டும்........... சக்திகளுக்கெல்லாம் சக்தியளிப்பவள் பராசக்தி. அந்தப் பராசக்தியின் அம்சமாக விளங்குபவள் மகாமாரியம்மன்."

இங்கு பராசக்தியின் அம்சம் மாரியம்மன் எனக் கூறப்படும் கருத்து சிவபுராணம் முதலிய புராணங்களில் கூறப்பட்ட கதைகளை அடியொற்றியதாகலாம்.

## *தரமுயர்த்தப்பட்ட வழிபாட்டு முறை:-*

மாரியம்மன் கிராமிய வழிபாட்டிலிருந்து தரமுயர்த்தப்பட்டவள் என்ற கருத்தும் அறிஞரிடையே நிலவுகிறது. பொதுவாகவே பாமரமக்களின் நம்பிக்கைகள் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைத் தரமுயர்த்தித் தமது உயர்நிலை வழிபாட்டு முறைக்குள் கொண்டுவருவதன மூலம், அம்மக்களைத் தமக்குள் அரவணைத்து, உயர்நிலை வழிபாட்டு முறைகளைப் படிப்படியாக அப் பாமரமக்களிடையே செறிவடையச் செய்யும் முயற்சி தொன்றுதொட்டே ஆன்றோர் வழக்கில் இருந்திருக்கிறது.

திரயீ வித்யா என்ற மூன்றாக இருந்த இருக்கு, யஜுர், சாமம் எனும் வேதங்களுடன் அதர்வவேதம் நான்காவதாக இணைக்கப்பட்ட வேதகால நடைமுறையே இக்கூற்றுக்கு ஆதாரமாக விளங்குவதாகும்.

கண்ணகி போன்ற மானிடத் தெய்வங்கள்கூட ஆகம நெறிப்படி தியானம் முதலியன உருவாக்கப்பட்டுப் பூஜிக்கப்படும் நெறிமுறையை நாம் இன்றும் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரியம்மன் வழிபாட்டின் தொன்மை

இந்த மரபில்தான் கிராமியத் தெய்வமாயிருந்த மாரியம்மன் மகாமாரி என்ற பெயரில் உயர்நிலைப்படுத்தப்பட்டு அந்தண சிரேஷ்டர்களாலும் ஆராதிக்கப்பட்டு வருகிறாள் எனக் கருத இடமுண்டு. ஆயின் இது மிக நீண்ட காலத்துக்கு முன்னரே நிகழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் உத்தர காரணாகமத்திலேயே மஹாமாரிப் பிரதிஷ்டை என ஒரு பகுதி தனியாக உள்ளது.

பொதுவாக ஆகமங்களின் காலத்தை ஆராய்ந்த ஆய்வாளர்கள் அதன் பின் எல்லையாக கி.பி 5ம், 6ம் நூற்றாண்டுகளைக் கொள்வர். எனவே உத்தரகாரணாகமம் அதற்கடுத்த நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்றிருக்கலாம்.

மேலும் "மாராசுரனை வதம் செய்ததால் மஹாமாரி எனப் பெயர் பெற்ற..........." என உத்தரகாரணாகமம் கூறுவதால் மாராசுரனை வதம் செய்த புராணக்கதையுடன் தொடர்புபடுத்தப்படும் நிலையில் மாரி பற்றிய கதைகள் புராண காலத்திலேயே உயர்நிலைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை உணரமுடிகிறது.

புராணங்களை நாம் ஆராய்கின்ற போது மாரியம்மன் வராலாறு தனித்து நிற்கும் முனைப்பான வரலாறாக இல்லாவிட்டாலும் மாரியம்மனுடன் தொடர்புடைய பரசுராமர், ஜமதக்னி முனிவர் ஆகியோரின் வரலாறுகள் புராணங்களில் மட்டுமல்லாமல் இதிகாசங்களிலும் இடம்பெறுகின்றன. இவர்கள் வரலாற்றினூடாக ரேணுகாதேவி என்ற பெயரில் மாரியம்மனை இப்பழம் பெரும் இலக்கியங்களில் நாம் தரிசிக்க முடிகிறது.

வான்மீகிராமாயணம், வியாசபாரதம் ஆகிய இதிகாசங்களிலும் சிவபுராணம், விநாயக புராணம், மச்ச புராணம், சூரியபுராணம், வராக புராணம், கூர்மபுராணம், லிங்கபுராணம், விஷ்ணுபுராணம், பாகவதபுராணம் முதலியவற்றிலும் தமிழ்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டத்திலும் காஞ்சிப்புராணம் முதலிய தல புராணங்களிலும் ரேணுகா தேவி - ஜமதக்னி முனிவர் கதைகளின் ஊடாக மாரியம்மன் வழிபாட்டின் ஆதார மூலக்கூறுகளைக் கண்டுணர முடிகிறது. பரசுராமரின் தந்தை ஜமதக்னி முனிவர் பற்றிய சில குறிப்புக்கள் வேதப்பாசுரங்களில் கூட இடம் பெறுவதால் மாரியம்மன் வழிபாட்டின் தொன்மை வியக்க வைக்கிறது.

## *மாறுபட்ட ஓர் இயல்பு*

முன்னர் குறிப்பிட்டவாறு கீழிருந்து மேல்நோக்கித் தரமுயர்த்தப்படும் வழிபாட்டுப் படிமுறை வளர்ச்சிநிலைக்கு மாறாக இதற்கு மறுதலையாக உயர்நிலைத் தெய்வமாக இருந்து சாதரண மக்களால் வழிபடப்படும் கீழ்நிலைக்கு இறங்கிவருகின்ற ஒரு வேறுபட்ட நிலையையும் நாம் மாரியம்மன் வழிபாட்டில் அவதானிக்கலாம்.

மேலும் காத்தவராயன் கூத்து முதலியவற்றிலும் இத்தகைய மாறுபட்ட போக்குக்கான ஆதாரங்களைக் காண முடிகிறது. இம்முறை அவதாரக் கோட்பாட்டுடன் இணைத்து நோக்கத்தக்கது.

எனவே மாரியம்மன் தோற்றம் பற்றிய புராணக் கதையையும் பாமரமக்கள் வழக்கிலுள்ள காத்தவராயன் கதையையும் நாம் ஒப்பீட்டு ரீதியில் முதலில் நோக்குவோம்.

## *ஜமதக்னி முனிவர் - ரேணுகாதேவி கதை*

ஏனைய பல புராணங்களிலும் இக்கதை இடம் பெறுகின்ற போதிலும் பெரும்பாலும் சிவபுராணத்தை அடியொற்றியே இங்கு எழுதப்படுகிறது. கி.பி 1899ல் வெளிவந்த ஆ. சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணியிலும் இந்த மாரியம்மன் வரலாறு சுருக்கமாகக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்திய மலைச்சாரலிலே நர்மதையாற்றங்கரையிலே செழுமை மிக்க வனப்பிரதேசத்திலே அழகிய பர்ணசாலை ஒன்றில் ஜமதக்னி முனிவரும் அவரது தர்மபத்தினி ரேணுகையும் வாழ்ந்து வந்தனர். யாகங்கள் பல செய்து கொண்டும் தவத்திலீடுபட்டுக் கொண்டும் இனிமையாக அவர்கள் நல்லறத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பிரம்மாவின் மானச புத்திரர் பிருகு முனிவர். அவருடைய வம்சத்தில் பிறந்தவர் இருசிகர். இவர் குசநாபன் என்ற முனிவரின் மகளும் விசுவாமித்திரரின் சகோதரியுமாகிய சத்தியவதி என்பவளைத் திருமணம் செய்து பெற்றெடுத்த புதல்வனே ஜமதக்னி முனிவர். ஜமதக்னி என்றால் புலன்களை வென்றவர் என்றும் யாகங்கள் செய்பவர் என்றும் பொருள்.

பாஞ்சால தேசத்துக்குத் தென்கிழக்குத்திசையில் தர்மசீலனாக வாழ்ந்து வந்த ரேணு என்பான் சிறந்த அரசனாயிருந்தான். அவன் நெடுங்காலம் மகப்பேறின்றி வருந்தி மனைவியுடன் வனம் சென்று தவத்திலீடுபட்டான். இவர்களது தவத்தைக் கண்டு மகிழ்ந்த உமையம்மையார் சிவபிரானிடம் வேண்டுதல் செய்கிறாள்.

"ரேணுவுக்கு மகளாகப் பிறந்து அறிவு குறைந்த ஏழை மக்களுக்கு அருள் செய்து நோய், வறுமை, முதலியற்றைப் போக்க விரும்புகிறேன்"

அதற்குச் சம்மதித்த சிவபிரான்,

"நீ ரேணுவின் மகளாகப் பிறந்து ஒரு தவசிரேஷ்டரின் மனைவியாகி விஷ்ணுவின் அம்சமான ஒரு புதல்வன் உட்பட நான்கு புதல்வர்களைப் பெறுவாய். பின் அபாண்டமான குற்றச் சாட்டினால் கொல்லப்படுவாய். அதன் பின் மனித சுபாவம் அகன்று கிராமிய தேவதையாகித் தென்னாட்டுக்குச் சென்று மக்களுக்கு அருள் செய்வாய்"

எனக் கூறி அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி உமாதேவியார் ரேணு என்ற மன்னன் மகளாகத் தோன்றி ஆதிரை, ரேணுகை என்ற பெயர்களுடன் வளர்ந்தாள். உரிய காலத்தில் முறைப்படி ஜமதக்னி முனிவரைத் திருமணம் செய்து இல்லறம் நடத்தினாள். இவர்களுக்குத் தண்ணுவன், அணுவன், விசுவாவசு, பரசுராமன் என நான்கு புதல்வர்கள்.

உபதேச காண்டம் இதனைப் பின்வருமாறு கூறும்.

*"ஒருங்கிய மனத்தியோக முற்றுணர்ந் தொருவ நின்றோன்*
*அருந்தவ முருவுவேண்டி யருந்தவஞ் செய்த தன்னோன்*
*கருங்கட விலத்துக் காமமுதலிய கடந்தோன் தெய்வப்*
*பெருங்குணச் சமதக்கினி யென்றொரு பேரினின்றோன்.*

*ஆங்கவற் குயிரே யன்னாள் அருந்தவச் சிறப்பினின்றாள்*
*வாங்கரும் கற்பின் தெய்வ பத்தினி மடவாள் மெல்லென்*
*றேங்கிய நுசிப்பு னொல்கு மிரேணுகை யென்பாள் தன்பால்*
*தேங்கமழ் துளவத் தாமன் திருவவ தாரம் செய்தான்"*

கிருதவீரியன் அல்லது தனதன் என்ற பெயரையுடைய மன்னனொருவன் சுநந்தை என்ற தன் மனைவியோடு புத்திரபாக்கியம் வேண்டித் தவம் செய்தான். முற்பிறப்பில் செய்த பல பாவம் காரணமாக அவனுக்குக் கைகளும் கால்களும் இல்லாத ஒரு குழந்தை பிறந்தது. அர்ச்சுனன் எனப் பெயரிட்டு வளர்த்த இவன் வடமொழித் தத்திதாந்த முறைப்படி கார்த்த வீர்யார்ச்சுனன் எனப்பின்னர் அழைக்கப்படலாயினான்.

இவன் சகல கலைகளையும் கற்றுணர்ந்து தத்தாத்திரேய முனிவரிடம் குருகுலவாசம் செய்து அவரிடம் வரம் பெற்று இருகால்களையும் ஆயிரம் கைகளையும் உடையவனானான். கிருதர் என்ற முனிவரிடம் அக்னியாஸ்திரமும் பெற்றுக் கொண்டான். தன் கரங்களின் பலத்தினாலும், அஸ்திரத்தின் பலத்தாலும் யாவரையும் வென்று மமதை கொண்டவனாக வாழ்ந்த காத்தவீர்யார்ச்சுனன் பற்றிப் பல கதைகளைப் பல்வேறு புராணங்களில் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களுடன் சேர்ந்து பாற்கடல் கடைந்தான் என்றும் அமுதம் குடித்ததனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்தான் என்றும் சொல்லப்படுகிறது. அழகிய பெண்களையெல்லாம் பலாத்காரமாகக் கவர்ந்து சென்று அந்தப்புரத்தில் வைத்திருந்தான். கார்த்தவீர்யனின் வீரத்தைக் கேள்விப்பட்ட இராவணன் அவனுடன் வந்து மோதித் தன் செருக்கழிந்து சென்றமையைக் கூர்ம புராணம் (தமிழ் மொழி பெயர்ப்பு - அகத்தியன் இராவணன் மரபு உணர்ததுப்படலம்) கூறுகின்றது.

காரத்தவீர்யன் பார்க்கவ முனிவரின் யாகத்தைக் குழப்பியதனால் அவரிட மிருந்து "உனது ஆயிரம் கரங்களும் ஒரு பிரமாணனால் அழியக்கடவது" என்ற சாபம் பெற்றான். இதே போல் இன்னொரு சந்தர்ப்பத்தில் வேறொரு முனிவரிடம் "உன் சிரம் பரசுராமானால் அறுக்கப்படும்" என்று சாபம் பெற்றான்.

### *கர்த்தவீரியன் வருகை*

கார்த்தவீர்யனும் பரிவாரங்களும் ஒரு சமயம் வேட்டையாடிக் களைப்போடு திரும்புகையில் வழியில் ஜமதக்னி முனிவரால் அவரது ஆசிரமத்தில் நன்கு உபசரிக்கப்பட்டனர். காட்டில் வாழும் முனிவர் அத்தனை பேருக்கும் பெருவிருந்தளித்தமை அவனுக்கு வியப்பாக இருந்தது.

தேவலோகப் பசுவாகிய காமதேனு அவ்வேளை அவரிடம் இருந்தமையே இச்செயல் நிகழத் துணைசெய்தது என அறிந்த கார்த்தவிர்யன் அதனைக் கவரவிரும்பினான். ஆனால் காமதேனு அவனது படையினரைக் கொன்று அவனையும் விரட்டியது.

அவ்வாறு அவமானத்துடன் ஓடும் போது ஆசிரமத்தினுள்ளிருந்து தலையை மட்டும் வெளியே நீட்டி எட்டிப்பார்த்த முனிவரின் மனைவி ரேணுகையைக் கண்ட கார்த்தவீர்யன் அவளது அழகில் மயங்கி அவளைக் கவர விரும்பினான். இவ்வரலாற்றைக் காஞ்சிபுராணம் ரேணுகைப்படலம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனையறக் கிழமையி னொழுகி மானிழை*
*தனை மலர்க் குழலியோர் ஞான்று பொய்கையிற்*
*கனை திரைத் தடம்புனல் கவரப் போந்துழி*
*வினைவழிக் கண்டனன் கார்த்த வீரியன்*

தன்னை அழகிய வாலிபனாகிய உரு மாற்றிக் கொண்ட கார்த்த வீர்யார்ச்சுனன் ரேணுகை செல்லும் வழி நின்றான். கற்பில் சிறந்த ரேணுகை அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மீண்டும் வேறொருபாயம் செய்தான் கார்த்தவீர்யன்.

ஓர் அழகிய கந்தர்வன்போல் உருமாறி அதிகாலையில் ரேணுகை நீராடும் பொய்கையின் மேல் பறந்து சென்றான். நீரில் தெரிந்த அந்த அழகிய உருவத்தைக்கண்டு ரேணுகை ஒருகணம் தடுமாறினாள். பின் தனது தவறை உணர்ந்து மனம் வருந்தியவாறு நீராடிவிட்டுப் புறப்பட்டாள்.

சிவபுராணம் மட்டுமே கார்த்தவீர்யனே கந்தர்வனாக வந்தானென்று கூறுகிறது. வேறு புராணங்கள் சித்ரசேனன் என்ற கந்தர்வன் வந்ததாகக் கூறும்

வழக்கமாக நீராடியதும் மலர்கள் கொய்துகொண்டு தன் கற்பின் வலிமையில் நீரை ஒரு பந்து போலத்திரட்டி எடுத்துக் கொண்டு போவது அவளது வழக்கம். ஆனால் அன்று நீர் திரண்டு வரவில்லை.

அவள் வாடிய முகத்துடன் ஆசிரம் திரும்பினாள். கணவர் அப்போதுதான் துயிலெழுந்து வெளியே வந்தார். அவரது பாதங்களில் விழ்ந்து வணங்கினாள் ரேணுகை. அவளது முக வாட்டத்தைக் கண்டு ஆலோசித்த ஜமதக்னி முனிவர் தம் தவவலிமயால் அன்று அதிகாலையில் பொய்கைக்கரையில் நிகழ்ந்ததை உணர்ந்தார்.

*பரசுராமன் தாயின் தலை கொய்தல்-*

தம் புதல்வர்கள் நால்வரையும் அழைத்துக் கற்புநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிய தாயின் தலையை வெட்டிவிடும்படி பணித்தார். முதல் மூவரும் மறுத்துவிட்டு ஓடிவிட்டனர். அவர்கள் தந்தையின் சாபத்தால் நரிகளாய் அலைந்தனர். பரசுராமன் தந்தையின் தவவலிமையும் கோபத்தையும் சிந்தித்தான். ஆனால் தாயின் மீதுள்ள அன்பு காரணமாகச் சிறிது தயங்கினான். ரேணுகை மகனை நோக்கி,

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. அதனாலே நீ யோசிக்காது அக்கட்டளையைச் செய்தால் நானும் எனது குற்றம் நீங்கிப் பதிவிரதை ஆகிவிடுவேன்" என்றாள்.

உடனே பரசுராமர் தாயைக் கொலைக்களத்துக்கு அழைத்துச்சென்று அவளது தலையை வாளால் வெட்டி விழுத்தினார். அதனைத் தடுக்கவந்த பலரையும் அவர் வெட்டி வீழ்த்த நேர்ந்தது. அதனால் அங்கு போர்க்களம் போல் உடல்கள் சிதறிக்கிடந்தன.

பரசுராமன் மீண்டும் தந்தை முன் வந்து பணிந்து நின்ற போது அவர் கோபம் தணிந்து நின்றார். "உன் தாய் சிவனிடம் பெற்ற வரம் நிறைவேறுகிறது. அவள் இனி மனிதப்பெண் அல்ல தெய்வமாகி விட்டாள்" எனக்கூறி விட்டு,

"என் சொல்லை நிறைவேற்றியபபடியால் நீ விரும்பிய மூன்று வரங்களைத் தருவேன்" என்றார்.

பரசுராமன் மகிழ்ந்து,

"உங்கள் கோபம் தணிந்து என் தமையன்மாரை மீண்டும் மனிதர்களாக்க வேண்டும்" என்றார்.

அவ்வாறே அவர் சம்மதிக்க மூத்தபுதல்வர் மூவரும் வந்து பணிந்தனர்.

"எம் தாய் மீது வெறுப்பை நீக்கி மறுமடி அவளை முன்போல் தங்கள் அன்பு மனைவியாக ஏற்க வேண்டும்" என்பதை இரண்டாவது வரமாகக் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்போல் அவள் ஆசிரம்திலிருந்து வரலாம்" என்றார் ஜமதக்னி முனிவர்.

மூன்றாவது வரமாக, இறைவனை மறவாத சிந்தையை வேண்டிக்கொண்டு தந்தையிடமிருந்து பெற்ற சிறந்த ஆயுதத்தையும் ஏந்திக்கொண்டு கொலைக்களம் நோக்கிப் புறப்பட்டான் பரசுராமன்.

*தாயினை உயிர்ப்பித்தல்*

தந்தை அவனிடம் நீர்க் கலசமொன்று கொடுத்துத் தாயின் தலையை உடலிலே பொருத்தி அந்நீரைத் தெளித்ததும் அவள் உயிர்பெற்றெழுவாளெனக் கூறினார். அவ்வாறே கொலைக்களம் சென்ற பரசுராமன் தாயின் தலையைக் கண்டெடுத்து அங்கே வீழ்ந்துகிடந்த முண்டங்களில் ஒன்றைத் தாயினது எனத் தேர்ந்தெடுத்துப் பொருத்தி நீரைத் தெளிக்க அவள் உயிர்பெற்றெழுந்து வந்தாள். அந்த உடல் உண்மையில் தீண்டத்தகாத குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுடையதாகும்.

மீண்டும் ஒரு தடவை யாரும் இல்லாதவேளை கார்த்தவீரியன் ஜமதக்னி முனிவரது ஆசிரமம் வந்து ரேணுகையைக் கவர முயற்சித்தான். அப்போது ஜமதக்னி முனிவரும் வந்துவிட்டார். ஒரு நீண்டவாளை எடுத்து ரேணுகை கொடுக்க அவர் அதனால் கார்த்தவீரியனின் ஆயிரம் கரங்களையும் வெட்டி வீழ்த்தினார். அவன் அலறிக்கொண்டு ஓடியதும் அவனது புதல்வர்கள் ஓடிவந்து முனிவரைக் கொன்று விட்டனர்.

பின்னர் அங்கு வந்த பரசுராமன் இதையறிந்து கார்த்தவீரியனைத் தேடிச் சென்று கொலை செய்துவிட்டு வந்து தந்தையைத் தகனம் செய்தான்.

அவன் நீரோடைக்குச் சென்ற சமயம் ரேணுகை கணவரின் சிதையில் உடன்கட்டை ஏறினாள். ஆனால் அவளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கவேண்டி இந்திரன் மழையைப் பொழிந்தான். ஆடைகள் எரிந்து விட்ட நிலையில் தீக்காயங்களுடன் சிதையிலிருந்து இறங்கிய ரேணுகை அங்கிருந்த வேப்பமரத்தின் இலைகளை ஆடையாக அணிந்து கொண்டு தென்திசை நோக்கி நடந்து ஒரு சேரியை அடைந்தாள்.

## *ரேணுகை மாரியன்னை ஆதல்*

அவளைக் கண்ட அச் சேரிவாழ் மக்கள் தாம் தீண்டத் தகாதவர்கள் ஆதலால் அவள் பசிபோக்க பச்சரிசிமா, வெல்லம், இளநீர், பானகம் இவற்றைப் புதிய மட்பாண்டத்தில் கொண்டுவந்து கொடுத்தனர். அவள் வரும் போது அங்கே கடும் மழை பெய்து அச்சுற்றாடல் உடனே வளம் கொண்டு பூத்துக்குலுங்கியது.

இவ்வாறு தென்னாட்டுக்கும், சேரிவாழ் மக்களுக்கும் மாரி மழைக்கும், வேப்பிலைக்கும், பச்சை உணவுகளுக்கும், குளிர்மையான உணவுகளுக்கும் மாரியம்மனுக்கும் உள்ள தொடர்பு இக்கதை மூலம் புலப்படுத்தப்படுகின்றது. இதன்பின் முத்துமாரி, மாரியம்மன் என்ற பெயர்களுடன் அவள் அப்பிரதேச மக்களுக்குத் தெய்வமாக விளங்கி வரலானாள்.

பின்னர் மீண்டும் வடக்கு நோக்கிச் சென்று கைலையில் ஒரு தவச்சாலை அமைத்துத் தவம் செய்தாள். சிவபிரான் காட்சி தந்து அவளது பழைய விருத்தாந்தங்களைச் சொல்லி, அவளை ஆறுதல்படுத்தினார்.

பரசுராமன் அவளது தலையை உடலுடன் சேர்த்த பொழுது வேறொரு பெண்ணின் உடலே சேர்க்கப்பட்டது. அதனால் பரசுராமன் அவளுக்கு இறுதிச்சடங்கு செய்ததும் அவளது உடல் பிரிந்து போய்விடத் தலை மட்டுமே உலகத்தவர்க்குத் தெரியும். அதனை உலகோர் வழிபடட்டும் எனவும் சிவன் கூறி வேண்டிய வரம் என்னவெனக் கேட்டார்.

‘‘சேரிகளில் வாழும் பாமர மக்களுக்கு இன்னல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வோரை வருத்தி, என்னை வழிபடும் பாமர மக்களுக்கு நல்லருள் பாலிக்க விரும்புகிறேன்" என்று ரேணுகா தேவி கேட்டாள். சிவபிரானும் அவளுக்கு அருள் செய்து தீயவர்களுக்கு வேதனை செய்யும் முத்துக்களை மாரியம்மனிடம் கொடுத்தார்.

"நீ இப்போது தேவதை ஆகிவிட்டாய். இந்த முத்துக்களை எடுத்துக்கொண்டு பூமியைச் சுற்றிவா. துட்டர்களுக்கு இவற்றை எறிந்தால் நீ கணவர் உடலுடன் தீயில் வீழ்ந்து பின் மழை பெய்தபோது நெருப்பு அணைந்து உன் உடலில் விழுந்த கொப்புளங்கள் போல் கொப்புளங்கள் உண்டாகும். நீ ஆடையாக ஆணிந்த வேப்பிலையே அந்தப் புண்களுக்கு மருந்தாகும்" என்று கூறி மறைந்தார்.

பௌராணிக மரபிலமைந்த இக்கதை மாரியம்மன் தோற்றத்தை ரேணுகாதேவியாகக் காட்டுகிறது. இன்றைய மாரியம்மன் வழிபாட்டு முறைகள் இதனோடு பொருந்தி வரக்காணலாம். இன்றும் பல இடங்களில் தலைமட்டும் தனியாக உருவாக்கி வைத்து அதற்கு அலங்காரம் செய்து வழிபடும் முறை காணப்படுகிறது. இதற்குக் காரணமாக அவளது தலையுடன் தவறான உடல் பொருத்தப்பட்ட கதை அமைகிறது

மேலும் இங்கு உமாதேவியின் அவதாரம் நேரடியாகச் சேரிப்புற மக்களுக்குரிய கிராமயத் தெய்வமாகப் படியிறங்கிவரும் நிலை கவனிக்கத்தக்கது.

### *தேவீ பராக்கிரமம் தரும் செய்தி*

இதே கருத்தை நாம் 'தேவீ பராக்கிரமம்' என்ற நூலிலும் அறியலாம். 'அஷ்டாஷ்டலீலை என்னும் தேவீ பராக்கிரமம்' என மகுடமிடப்பட்ட அந்நூல் ரேணுகையை அபேதவர்மன் என்ற மன்னன் மகளாகக் குறிப்பிடுகிறது.

சிவபுராணக் கதையே இங்கும் காணப்படுகிதெனினும் இறுதியில் மகன் மூலம் எழுப்பப்பட்ட ரேணுகாதேவி காஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரில் சிவலிங்கபூஜை செய்து கலியுக மானிடர் விருப்பமும் இழிகுலத்தோர் விருப்பமும் நிறைவேற்றும் வல்லமை பெற்றாள் என்றும் சிவனிடமிருந்து சர்ப்பகுண்டலமும் வாளும் கேடயமும் பெற்றுக் கொண்டு போதராஜன் முதலிய சிறுதேவ கணம் புடைசூழப் புறப்பட்டாள் எனக் குறிப்பிடப்படுகிறது.

## *காத்தவராயன் கதையில் மாரியம்மன்*

மாரியம்மன் வழிபாடு தொடர்பாக ஆராயும்போது மக்களிலக்கியக்கிமாகக் கூத்து முறைப் பாரம்பரியத்தில் நீண்ட காலம் வழங்கிவரும் காத்தவராயன் கதையும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். இக்கூத்து பெரும்பாலும் சேரிவாழ் மக்களாகிய பாமரமக்களாலேயே இன்றளவும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

காத்தவராயன் மாரியம்மனுடன் தொடர்புடைய ஒருசிறு தெய்வமாக வழிபடப்படுதலைத் தமிழ் மக்களிடையே காணலாம். காத்தவராயன் என்ற பெயர் காத்தான் என்றும் வழங்கப்படுகிறது. காத்தவராயன் நாடகம் தென்னிந்தியாவின் சில பகுதிகளில் தெருக் கூத்தாக ஆடப்படுகிறது. ஈழத்தில் ஊர்ப்புறக் கோயில் வீதிகளில் அமைக்கப்பட்ட மேடைகளில் பயபக்தியோடு நேர்த்திக்கடன் இறுத்தல் என்ற வகையில் புனிதமாக நடத்தப்படுகிறது. கூத்து கதைப்பாடல், கரகப்பாடல், வில்லுப்பாட்டு, கும்மிப்பாடல், முதலிய பல வடிவங்களில் காத்தவராயன் கதை மக்களிடையே வழங்கி வருவதன் மூலம் இதன் கிராமியத்தன்மை புரிந்து கொள்ளப்படலாம்.

1930களிலும் 1960களிலுமாக இரு தடவை "காத்தவராயன்" திரைப்படமாகவும் வெளிவந்தமை மக்கள் மத்தியில் இக்கதைக்கிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துகிறது.

தமிழகத்தில் சென்னையில் திருமகள் விலாச அச்சகத்தில் "காத்தவராயர் சண்டை எனும் காத்தமுத்து நாடகம்" என்ற பெயரில் மிகப்பழைய காலத்தில் இக்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்வடிவில் வெளியிடப்பட்டிருக்கிறது. இதைவிட "காத்தவராய சுவாமி கதை" என்றபெயரில் ஒரு நூல் வெளிவந்திருக்கிறது. 1971இல் பேராசிரியர் நா. வானமாமலை பதிப்பாக மதுரைப்பல்கலைக்கழகம் "காத்தவராயன் கதைப்பாடல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது. ஈழத்தில் யாழ்ப்பாண மாவட்ட கலாசாரப்பேரவை வெளியீடாக கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களது முயற்சியில் "காத்தவராயன் நாடகம்" என்ற நூல் 1986 இல் வெளிவந்துள்ளது.

## *காத்தவராயன் பிறப்பு*

இவை எல்லாவற்றிலும் சிலசில முரண்பாடுகள் காணப்பட்டபோதிலும் காத்தவராயன் மாரியம்மனின் மகன் என்பது பொதுமைப் பண்பாக உள்ளது.

முருகனே காத்தவராயனாக அவதாரம் எடுத்தார் என்பது சிலபிரதிகளின் கருத்து. சிவன் பெண் மானாகவும் திருமால் ஆண் மானாகவும் தோன்றிப் பெற்றெடுத்த மான்கன்று மாரியம்மனிடம் ஆண்குழந்தையாக மாறி வளர்ப்புக் குழந்தையாக வளர்கிறது. அவளது பூந்தோட்டங்களைக் காத்தமையால் காத்தவராயன் என்ற பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. இக்கதைகளில் மாரி உமாதேவியின் தங்கையாகச் சித்திரிக்கப்படுகிறது.

ஆனால் ரேணுகாதேவி கதையுடன் இங்கு பெரும் முரண்பாடு காணப்படுகிறது. ரேணுகாதேவி திருமணமாகிக் குழந்தைகள் பெற்றெடுத்து வைதவ்யம் அடைந்தவள். ஆனால் காத்தவராயன் கதைகளில் மாரியம்மன் கன்னிப் பெண்ணாகவும் தவவலிமையால் சிவனிடம் வரம் பெற்றுக் காத்தவராயனை வளர்ப்பு மகனாகக் கொண்டவள் எனவும் கூறப்படுகிறது.

உமாதேவியின் தங்கையாகிய மாரியம்மன் பூமாதேவியின் வேண்டுகோளுக்கிணங்கப் பூபாரம் தீர்ப்பதற்காகச் சிவனை நோக்கித் தவமிருக்கிறாள். கண்டசுரமாலை என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துமாலையைச் சிவனிடமிருந்து பெறுகிறாள். இதுவே நோய்களை உண்டாக்குவதாகும்.

இதன்மூலம் ஊருலகத்தில் தீயவர்களுக்கு நோய் கொடுத்து நல்லவர்களைக் காத்துவரும் மாரியம்மன் சிவனிடம் வரம் வாங்கிக் காத்தவராயனை வளர்ப்புமகனாகப் பெற்றுத் தனது பூந்தோட்டத்தைக் காவல் செய்ய வைத்தாள். நந்தவனத்தைக் காவல் செய்தமையாலே 'காத்தான்' எனப் பெயர் பெற்றான் என்பர்.

"புராணக் கதைகளின் வழியே நோக்கும் போது காத்தவராயர் காவல் தெய்வமாக் காட்டப்படுகிறார். வைரவர், வீரபத்திரர், முனியப்பர் முதலிய தெய்வங்களைப்போன்று காத்தவராயரும் கிராமியக் காவல் தெய்வமாகவே போற்றப் படுகிறார். சிலப்பதிகாரத்தில் சாத்தான் என்பது காவல் தெய்வமாகும். அவ்வாறாயின் சாத்தான் காத்தான் ஆயிற்றோ எனவும் ஐயுற இடமுண்டு.

சிவன், திருமால் இருவருக்கும் பிறந்த ஹரி ஹர புத்திரனே ஐயனர், ஐயப்பன், சாத்தான், சாஸ்தா என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். காத்தவராயரின் கதை கூறும் பிறப்பும் அவரை ஹரிஹர புத்திரனாகவே காட்டுகின்றது.

*மாரியம்மன் வழிபாடும் காத்தான் கூத்தும்*

தமிழர்தம் சிறப்புத் தெய்வங்களாகவே மாரியம்மனும் காத்தவராயரும் விளங்குவதும், மாரியம்மன் கோயில்களிலேயே காத்தவராயன் வழிபாடு இட்பெறுகிறது என்பதும் நோக்கற் பாலது.

இன்றுவரை மாரியம்மன் வழிபாடு நடைபெறும் இடங்களில் பெரும்பாலும் காத்தவராயன் கூத்து நடைபெறுவதுண்டு. இக்கூத்துக்களைப் பேணிப் பாதுகாத்து நடத்துவோர் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட வகுப்பாரே என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் செய்திகள் பௌராணிக மரபிலும் சரி கிராமிய வழக்கிலும் சரி, பராசக்தியாகிய உமா தேவியின் அம்சமான முத்துமாரியம்மன் சாதாரண கிராமியத் தெய்வமாக மாறிப் பாமரமக்களின் வழிபாட்டை ஏற்றருளும் மரபினைக் காட்டுகின்றன.

அதேநேரத்தில், உத்தர காரணகம காலத்திலிருந்தே மாரியம்மன் உயர்நிலைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரதிஷ்டை உற்சவம் என்பனவற்றையுடையதாக வளம் பெற்று வந்திருப்பதைக் காண்கிறோம்.

முக்கண்ணுடையவளாகவும், நான்கு கரமுடையவளாகவும் சித்திரிக்கப்படுவதும் மாரியம்மனது உயர்நிலையைக் காட்டுகின்றன. கிராமிய மரபின்படி சிவபிரானுக்கு மூன்றாவது கண்ணை வழங்கியளே மாரியம்மன்தான்.

*ரேணுகாவிற்கும் மஹாமாரிக்குமுள்ள இணைப்பு*

இன்னொரு விதத்தில் மாரியம்மன் கதை புராணங்களினூடாக வழங்கிவருகிறது.

சகல உயிர்களுக்கும் சிவபிரான் படியளக்கின்றாரா எனப் பரிசோதிக்க விரும்பிய உமையம்மையார் சில சிற்றெறும்புகளைப் பிடித்து ஒரு சிமிழியிலடைந்து வைத்தாள்.

மறுநாள் அதனைத் திறந்து பார்த்தபோது ஒவ்வோர் எறும்பும் ஒவ்வொரு நெல்மணிகளைக் கவ்விக் கொண்டிருந்தன. இறைவனைச் சந்தேகித்த குற்றத்துக்கு வருந்திப் பாபவிமோசனம் தரும்படி சிவனை வேண்டினாள். பூமியில் ஒரு நந்தவனம் அமைத்து அரனை அர்ச்சிக்க வேண்டுமென அவர் கட்டளையிட்டார். இதன்படி அவதரித்தவளே மகாமாரிதேவி.

இக்கதை மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. சி கணபதிப்பிள்ளை அவர்களால் 1971இல் வெளியிடப்பட்ட "மகாமாரித் தேவி திவ்விய கரணி" என்ற நூலில் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மகாமாரி தனது பூந்தோட்டத்தைக் காவல் செய்யக் காத்தவராயனை நியமித்ததாகவும் அவன் காமம்கொண்டு தவறு செய்தபொழுது சிவன் சாபமிட்டார் எனவும் அதற்கு மாரியம்மன் மறுசாபம் கொடுத்த போது சிவன் மாரியம்மனுக்கு கொடுத்த சாபத்தின்படி அவள் ரேணுகாதேவியாகப் பிறந்தாள் என்று இக்கதை கூறுகின்றது.

எனவே ரேணுகாதேவி மகாமாரி என மாற்றம் பெற்ற முதற்கதைக்கு இது அடிநாதமாக இருந்தது ரேணுகாதேவியின் வரலாற்றுக்கு முன்னரே மாரியம்மன் இருந்தமையைக் காட்டுகிறது.

## *மட்டக்களப்பு மாரியம்மன் பத்ததிகள்*

இக்கதைகளுக்கான ஆதாரம் மட்டக்களப்பு நகரிலே காலங்காலமாகப் பாதுகாத்துவரப்படும் பாரம்பரியமான மாரியம்மன் பத்ததிகளாகும்.

இப்பிரதிகள் பலவற்றைப் பரிசோதித்துத் தொகுத்தவராகிய சி. கணபதிப்பிள்ளை என்பார் வியாச பாரதத்தில் இடம் பெறும் ஜமதக்னி முனிவர் கதைக்கும் இந்தப் பத்ததிகளிலுமுள்ள கதைக்குமிடையில் காணப்படும் முரண்பாடுகளையும் சுட்டிக் காட்டுகிறார்.

மட்டக்களப்புக் கதை மரபிலே ஜமதக்னி முனிவரின் மனைவி எக்கலாதேவி எனக் காணப்படுவதோடு சிலபிரதிகளில் ஜமதக்னி என்பதற்குப்பதிலாக கந்தமாமுனி என்ற பெயரும் காணப்படுகிறது. இவர்களது பிள்ளைகள் எழுவர் என்றும் அவர்களிலொருவர் பரசுராமர் எனவும் இக்கதை கூறுகிறது.

மேலும் உத்தரகாரணாகமம் கூறும் மாராசுரவதம் பற்றி இன்று கிடைக்கும் புராணங்களில் நேரடிக்குறிப்பெதுவும் கிடைக்கவில்லையெனினும் மட்டக்களப்புப் பத்ததிகளில் அதற்கு விடைகாண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம் செய்த மாரியம்மன் சிவனிடம் கண்டசுரமாலையைப் பெற்றபின் மாராசுர அரசனது பட்டணத்துக்குச் சென்று முத்துக்களை வீசியதாக இக்கதை கூறுகிறது. யாழ்ப்பாணத்துக் காத்தவராயன் நாடகத்தில் வைசூர ராசனுடைய நகரம் செல்வதாகக் கூறப்படுகிறது. மாரசுரன், வைசூரராசன் பெயர்ப் பொருத்தம் அவதானிக்கப்படலாம்.

## *மாராசுரவதம் ஸ்காந்தபுராணச் செய்தி*

இவ்விடத்தில் மாராசுரவதம்பற்றிய செய்தியை டாக்டர் இரா.செல்வக்கணபதி எம். ஏ. பி.எட். பி. எச்.டி. அவர்கள் எழுதிய "மகாமாரியம்மன் அருள் வரலாறு" என்ற நூலிலும் நாம் கண்டறியலாம். இக்கதையில் சீதளா தேவிதான் மகாமாரி என்பதற்கான ஆதாரங்களை நாம் பெறமுடிகிறது.

அசுரர்களின் பெருந்தொல்லை பொறுக்கமாட்டாத தேவர்கள் இறைவன் துணையால் அவர்களை ஒடுக்கிப் பாதாள உலகுக்கு அனுப்பினர். இதனால் வருந்திய அசுரர் தம்குல குருவாகிய சுக்கிராசாரியார் மூலம் அபிசார வேள்வி ஒன்றைச் செய்வித்து அதனால் வெம்மையை உண்டாக்கினர். தேவர்கள் உடல் முழுவதும் கொப்புளங்கள் தோன்றிக் கடும் நோயினால் துன்புற்றனர்.

அவர்கள் சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தபோது அங்கு தோன்றிய சிவபிரான் கருணை கொண்டு தமது சடாமுடியிலுள்ள சந்திரனிலிருந்தும் கங்கையிலிருந்தும் மாயா சக்தியாகிய சீதளா தேவியைக் குளிர்ந்த வடிவினளாக உருவாக்கினார். சீதளா என்றால் குளிர்மை என்பது பொருள்

## *மாரியின் தோற்றம்*

நான்கு திருக்கரங்களில் கத்தி, கபாலம், உடுக்கை, பாசம் ஆகியவற்றை எந்தியவாறு தீக்கொழுந்து போன்ற சடாமுடியுடனும் ஐந்தலை நாகம் குடைபிடிக்கத் தோன்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தேவி சிவனால் வழங்கப்பெற்ற பிரம்பும் வேப்பிலையும் கொண்டு அவ்வப்போது உலகில் தோன்றும் வெப்பு நோய்களை மாற்றி அருள் செய்தாள். மாரியையும் பொழிவித்தாள்.

அசுரர்கள் அடையும் தோல்விகளைக் கண்டு மனம் பொறாத சுக்கிராச்சாரியார் மீண்டும் ஓர் அபிசார வேள்வி செய்த போது யாவரையும் மரணமடையச் செய்யும் ஆற்றலுடைய மாராசுரன் என்ற அசுரன் தோன்றினான். அம்பிகை அந்த அசுரனோடு போர் செய்து அவளைச் சங்கரித்தாள். மாராசுரனை வதம் செய்ததால் மகாமாரி எனப் பெயர் பெற்றாள்.

இக்கதை இடம்பெறுவது ஸ்காந்த மகாபுரணாத்தில் ஆகும். ஸ்காந்த மகாபுராணத்திலிடம் பெறும் உமா மகேஸ்வர சம்பாஷணையாக அமைந்திருக்கும் சீதளா ஸ்தோத்திரம் நித்திய பாராயணத்துக்குரியதாக ரிஷி, சந்தஸ் முதலியவற்றுடன் அமைக்கப்பட்டு வழங்குவது இதன் சிறப்புக்கு எடுத்துக்காட்டு. பி.பா. பஞ்சாட்சரக்குருக்கள் வெளியிட்ட "மாரியம்மன் கைஸ்ரநாம ஸ்தோத்திரம்" என்ற நூலில் இத்தகவல் காட்டப்பட்டுள்ளது.

## *கலைக்களஞ்சியம் தரும் செய்திகள்*

சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கலைக்களஞ்சியம் மாரியம்மனைப் பற்றிக் கூறுகையில் ஏனைய கிராமியத் தெய்வங்களைவிட மாரியம்மன் பிரபலம் பெற்றிருப்பதாகக் குறிப்பிடுகிறது.

செல்வி, செல்லி, செல்லியாத்தாள், செல்லாண்டியம்மன், ஆயிரங்கண்ணுடையாள், முத்துமாரி, மாரியாத்தா, ஆயி, மகாமாயி முதலிய பெயர்கள் பலவற்றால் அவள் அழைக்கப்படுவதே அவளது செல்வாக்கைப் புலப்படுத்துகிறது.

மாராக்கா, மாராப்பா, மாரியப்பா, மாரிமுத்து, மாரியாயி, அங்கமுத்து, முத்தம்மா, கண்ணாயிரம், முத்தாலம்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம்மாள், முதலிய மக்கட் பெயர்கள் இந்தச் செல்வாக்கின் விளைவாக எழுந்தன என்பதும் கலைக்களஞ்சியத்தில் சுட்டிக் காட்டப்படுகிறது.

## *கண்ணகி வழிபாட்டுடன் ஒப்பீடு*

கண்ணகி வழிபாடு பற்றிச் சிலம்பு கூறியிருக்கும் கருத்துக்கள் இன்றைய மாரியம்மன் வழிபாட்டுடன் ஒத்திருக்கும் இயல்பையும் எடுத்துக் காட்டிக் கண்ணகி வழிபாடே மாரியம்மன் வழிபாடாக மாறியிருக்கலாம் என அங்கு குறிப்பிடப்படுகிறது.

குளிர்த்தி, பொங்கல் முதலிய வழிபாட்டு முறைகளிலும் கோபம், ஆங்காரம் முதலிய குண இயல்புகளிலும் வைதவ்யம் என்ற பண்பு நிலையிலும் ஒற்றுமையிருப்பினும் இரு தெய்வங்களுக்கும் இடையில் பாரிய வேறுபட்டிருப்பதை ஆய்வின் போது அவதானிக்க முடிகிறது.

கண்ணகி வழிபாட்டின் மூலவேர்கள் சங்கத் தமிழிலக்கியங்களில் காணப்படுகிறது. அவள் தமிழர்களுக்கு மட்டுமே உரிய தெய்வமாக விளங்குகிறாள்.

மாரியம்மன் வழிபாட்டின் ஆரம்பநிலை தெளிவுடையதாக. இன்னும் புலப்படவில்லையெனினும் தமிழர் மத்தியில் மிகப் பிரபலமாயிருக்கும் இவளது தோற்றம் பௌராணிக மரபில் உருவானது என்பது நிச்சயமாகிறது. தமிழர் மரபில் மாரியம்மனின் வழிபாட்டு மரபுக் கூறுகளை நாம் சங்க இலக்கியங்களில் காண முடியவில்லை என்பது உண்மையே எனினும் தமிழ்நாட்டில் வழங்கும் பழங்கதை ஒன்றைக் கலைக்களஞ்சியம் தருகிறது.

## *தமிழகப் பழங்கதை*

பிருகு முனிவரின் மனைவி நாகவல்லி அழகில் சிறந்தவள். இவளது கற்பைச் சோதிக்க் வந்த மும்மூர்த்திகளையும் தனது கற்பின் வலிமையால் இவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளாக்குகிறாள் (அநசூயா கதையுடன் ஒப்பிடலாம்) இதனால் கோபமுற்ற மும்மூர்த்திகள் அவளைச் சபிக்கின்றனர். இதனால் அவளது அழகு மங்கி முகத்தில் வடுக்கள் தோன்றுகின்றன. இல்லம் திரும்பிய முனிவர் மனைவியின் குரூபியான தோற்றத்தைக்கண்டு வெறுப்புற்று அவளை விரட்டி "உலகில் அலகையாய்த் திரிந்து நோய்களைப் பரப்பி வருவாய்" எனச் சாபமிட்டார்.

உருமாறி வந்தபடியால் இவள் மாரி என வழங்கப்பட்டாள். இவளை ஒரு சலவைத் தொழிலாளி காப்பாற்றியதால் "உப்பை" என்றும் அவள் பெயர் பெறுகிறாள்.

மாரியம்மன் பற்றிய எல்லா வரலாறுகளிலும் அவள் தன் உருமாற்றம் பெற்றுத் தெய்வீக நிலை அடைந்தவுடன் சேரிகளுக்குச் செல்வதாகக் குறிப்பிடப்படும் இடத்தில் சலவைத்தொழிலாளர், பறையர் ஆகியோர் முக்கிய இடம் பெறுகின்றனர்.

இன்றும் மாரியம்மன் வழிபாட்டிடங்கள் பலவற்றில் பொங்கல் குளிர்த்தி மடைகளின் போது பறையடிப்பது கவனிக்கத்தக்கது. மேலும் பல மாரியம்மன் ஆலயங்களில் சலவைத் தொழிலாளர் பூசாரிகளாக உள்ளனர் என மட்டக்களப்புப் பிரதேச மாரியம்மன் வழிபாடு பற்றி எடுத்துக் கூறிய திரு. சி. கணபதிப்பிள்ளை சுட்டிக்காட்டுகிறார்.

## *தமிழகத்தில் மாரியம்மன வழிபாடு*

"மைசூர் இராச்சியத்தை ஆண்ட பல்லாலகுல அரசனும் துளவகொங்கு, பாண்டி, சோழ, ஈழ, மலைய, மத்திய, விஜயநகர, கலிங்க, பல்லவ, வாதாபி நாடுகளைச் சேர்ந்த அரசர்கள் மாரியம்மனை வழிபட்டனர்'' என்று குறிப்பிடும் சி. கணபதிப்பிள்ளையவர்கள்

''பல்லவ ராச்சியத்தை ஆண்ட 2ம் நரசிம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபைப்பள்ளிக்கு வடக்கே ஒன்பது மைல் தூரத்தில் சமயபுரம் என்ற இடத்தில் மாரியம்மன் கோயில் ஒன்றைக் கட்டி வழிபாடு செய்ததாக அறிய முடிகிறது.........

..........1310ல் அலாவுதீன் படைகள் கொய்சலேசுவரர் கோயிலைத் தரைமட்டமாக்கியபோதும் கண்ணனூர் சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்குத் திறை கொடுத்ததாக அறிய முடிகிறது" எனக் கூறுகிறார்.

சமயபுரம் முத்துமாரியம்மன் கோயிலின் தலவரலாறு கூறும் நூல்கள் பலவற்றிலும் இத்தகவல் இதே மாதிரிக் காணப்படுகிறது.

தஞ்சாவூருக்குக் கிழக்கே 5 கல் தொலைவில் மாரியம்மன் கோயில் என்ற சிற்றூரில் கி.பி 10ம் நூற்றாண்டில் சோழர் கட்டிய கோயில் உண்டு என முனைவர் இரா. செல்வக்கணபதி தெரிவிக்கிறார்.

சென்னையை அடுத்துள்ள திருவேற்காட்டில் பிரபலமாக விளங்கும் தெய்வம் கருமாரி. இத்தெய்வமும் மகாமாரியம்மனின் வடிவமாயிருப்பதுடன் இத்திருவுருவத்தின் முன்னே வைக்கப்பட்டிருக்கும் தலைமட்டுமான வடிவம் ரேணுகாதேவியின் கதையை ஆதாரமாகக் கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டலாம். ஆனால் இத்தலத்தில் வேறுபட்ட ஒரு கதை வழங்குவதை டாக்டர் இரா. செல்வக்கணபதி அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்.

"முன்னொரு காலத்தில் சிவபிரான் உருத்திரபூபதியாகிய சுடுகாட்டிலிருந்து கைலை திரும்பினார். அப்போது தன்னருகேயிருந்த பாலாம்பிகையிடம் தன்மேனியிலிருந்த விபூதியை எடுத்துக் கொடுத்து,

"இதைக் கொண்டு ஐந்தொழில் புரிந்து வருக" எனப்பணித்து நிஷ்டையிலமர்ந்ததால் அம்மை தம்மை அந்தராக்ஷி, ஆகாசாக்ஷி, பிரமாக்ஷி, காமாக்ஷி, மீனாக்ஷி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாக்ஷி, மாரி எனப்படும் ஏழு கன்னியராக மாறினார். அந்தராக்ஷி காடுகளிலும் ஆகாசாக்ஷி மலைகளிலும் பிரமாக்ஷி நதிகளிலும், காமாக்ஷி காஞ்சியிலும் மீனாக்ஷி மதுரையிலும் விசாலாக்ஷி காசியிலும் சென்று தங்கினர்.

மாரி இறைவன் தன்னைவிட்டுப்பிரிந்த இடத்தையே தமதிருப்பிடமாகக் கொண்டு தன்னை மேலும் இரு உருவாக்கி முன்னும் பின்னுமாக அமர்ந்தாள். முன்னுள்ள உருவத்தில் தலைமட்டும் மேலே விளங்க உடலைப்பூமியாகிய கருவில் மறைத்துச் சிவசக்தி ஐக்கிய ரூபமாக விளங்குகிறார். பின்புறம் உள்ள உருவில் கைகளில் பொற்கிண்ணம், சூலம், உடுக்கை இவற்றையேந்தி ஐந்தலைநாகம் குடைபிடிக்க வீரசாசனத்தில் காட்சி தருகிறாள்"

இவை தமிழகத்தில் மாரியம்மன் வழிபாட்டுத் தொன்மைகளைக் காட்டும் அதே நேரத்தில் ஏற்கனவே குறிப்பிட்டபடி பௌராணிக மரபில் கண்ணகி வழிபாட்டுக்கு இல்லாத தனியிடம் மாரியம்மனுக்கு இருப்பதையும் காட்டுகின்றன.

உத்தரகாரணாகாமம் மாரியம்மன் பிரதிஷ்டை பற்றிக் கூறுகிறது என்பதை எற்கனவே எடுத்துக் காட்டினோம். அதற்கு முன்னரே யோகஜ ஆகமத்தில்

"நித்திய வழிபாடு, மாத வழிபாடு, உற்சவம் - இவை முறையாக நடத்தப் பெறுகின்ற ஆலயத்தைச் சுற்றிலும் குறைந்தது பத்துக்கல் சுற்றளவுக்கு எந்த ஆபத்தும் நேராது. தீவிபத்து, வெள்ளவிபத்து, பூகம்பம், சுவர் இடிந்து சரிதல், மஹாமாரீ போன்ற நோய்கள் - இவை அப்பரப்பை அணுகா" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு மஹாமாரீ என்பது நோய்களுக்குள்ள பெயராகச் சுட்டப்படுவதால் இத்தகைய நோய்களுக்குரிய தேவதையை மஹாமாரீ என்ற பெயரால் அழைக்கும் வழக்கம் இருந்திருப்பதையும் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான அடிப்படைகளை எற்கெனவே கண்ட சிவபுராணம் ஸ்கந்தபுராணம் முதலியவற்றின் கதைப்பகுதிகள் விளக்கி நிற்கின்றன.

வாதுளாகமத்திலும் மஹாமாரி ஸ்தாபனம் என்ற ஒரு பகுதி இருப்பதுடன் தனியாக மஹாமாரி யந்த்ர விதிப் படலமும் இருப்பது சிறப்பான செய்தியாகும்.

## *ஜயேஷ்டாதேவியும் மகாமாரியும்*

ஸ்காந்த புராணத்தில் வரும் சீதளா ஸ்தோத்திரத்தின் முதற்செய்யுள் கழுதை வாகனியாகவும், அம்மன் ரூபமாகவும் துடைப்பத்தைக் கையிலேந்தியவளாகவும் சீதளாதேவியை வர்ணிக்கிறது. இது வியப்பூட்டுவதாக உள்ளதோடு சீதாளா மகாமாரியம்மனை மூதேவியுடன் இணைத்துக் கூறும் சில அறிஞர்களின் கருத்தை ஆராயத்தூண்டுகிறது.

'The Elements of Hindu Iconography" என்ற தமது நூலில் (Volume one – Part II) ஜ்யேஷ்டா தேவி என்னும் மூதேவியைப்பற்றி விரிவாக ஆராய்ந்துள்ள T. A கோபிநாத் ராவ் எந்த ஓரிடத்திலும் அத்தெய்வத்தை மஹாமாரியுடன் இணைத்து நோக்கவில்லை.

ஜ்யேஷ்டாதேவி ஆதி சக்தியின் அம்சமாகப் பாற்கடலில் தோன்றியவள் என்ற கருத்தைச் சுப்ரபேதாகமத்திலிருந்து எடுத்துக்காட்டுவதோடு அலக்ஷ்மீ(மூதேவி) என்பதை விஷ்ணுதர்மோத்திரத்திலிருந்து எடுத்துக்காட்டும் அவர் அம்சுமத்பேதம், பூவர்காரணாகமம் முதலியவற்றின் மேற்கோள்களால் இரு கரங்களுடைய அழகற்ற ஒரு தெய்வமாக ஜ்யேஷ்டா தேவியை விளக்குகிறார்.

போதாயன க்ருஹ்ய சூத்திரத்திலும் ஜ்யேஷ்டாதேவி பற்றிய குறிப்புகள் உள. புராணக்கதைகளின்படி பாற்கடல் கடைந்தபோது முதலில் தோன்றிய இவளை யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பவில்லை. இதனால் துஷாரமஹரிஷி என்பார் மணந்து அழைத்துச் சென்றார் (லிங்கபுராணத்தில் இத்தகவல் உண்டு) கபிலமுனிவர் ஏற்றதால் கபிலபத்தினி எனப் பெயருண்டு என வேறுசில புராணங்கள் கூறுகின்றன.

கழுதை வாகனத்தையும், காகக் கொடியையும், துடைப்ப ஆயுதத்தையும் கொண்டவள். நீலோத்பலத்தை ஒரு கையிலேந்தியவளாகவும் அருகில் எருமைத் தலையுடைய இன்னொரு சக்தியோடு தொடர்பு படுத்தப்படுபவளாகவும் பலநூல்கள் கூறுகின்றன.

வாமா முதலிய அஷ்டமாதர்களில் ஒருவராக அமையும் ஜ்யேஷ்டா கபாலமும் அம்பும் ஏந்தியவளாக பவிஷ்ய புராணத்தில் வர்ணிக்கப்படுகிறாள்.

ஆலயத்தில் ஒரு மூலையில் கவனிப்பாரற்று இத்தேவியின் திருவுருவம் கிடப்பதாகவும் பல இடங்களில் இவ்வுருவம் ஆலயத்திலிருந்து தூக்கி எறியப்பட்டுவிட்டதாகவும் கோபிநாத்ராவ் தெரிவிக்கிறார்.

எனவே சீதளாதேவியாகிய மாரியம்மனை மூதேவியுடன் இணைத்து நோக்குதல் சிறிதும் பொருந்தாது என்பது போதரும்.

*சிவகாமபத்ததிகள் கூறும் மரபு*

இனி, ஆகமங்களின் வழிவந்த பல பத்ததிகளில் மாரியம்மன் பிரதிஷ்டை கூறப்படும்போது 'சீதாளாகௌமாரீ பிரதிஷ்டை' என்றே கூறப்படுகிறது. இங்கு சீதளாதேவிக்கும் கௌமாரிக்கும் உள்ள தொடர்பு ஆராயப்படவேண்டியது. கௌமாரி என்பவள் பிராமி, மாஹேஸ்வரி முதலிய அஷ்டமாதர்களில் ஒருத்தியாகவும் குமரக்கடவுளாகிய முருகனின் சக்திவடிவமாகவும் கூறப்படுகிறது.

இன்னொரு வகையில் குமரக்கடவுளின் பஞ்சாசன பூஜையில் விமலாசனத்திலிடம் பெறும் சக்திகளில் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதளாதேவியாகும். எனவே முருகவழிபாட்டுடனும் மாரியம்மன் இணைக்கப்படுகிறாள்.

சாக்த மரபில் ஸ்ரீசக்ர வழிபாட்டிலிடம் பெறும் பல்வேறு சக்திகளில் மாரியம்மன் இடம்பெறவில்லையெனினும் தேவீ மஹாத்மியமென்னும் துர்க்கா சப்தசதியில் மாரியம்மனாகவும் தோன்றுபவள் அந்த மகாசக்தியே என்ற குறிப்பை மட்டும் காணுகிறோம்.

Hindu Godesses என்ற நூலில் Devid kinsly என்பார் சீதளா, மாரியம்மன் இரண்டுமே நோய்களுடன் தொடர்பு படுத்தப்படுபவை என்றும் வட இந்தியாவில் மனசா தேவியும் தென்னிந்தியாவில் மாரியம்மனும் மிகப் பிரபலமாக விளங்கும் கிராமியத் தெய்வங்களக்கு உதாரணங்கள் எனவும் தெரிவிக்கின்றார். மாரியம்மனின் தோற்றம் பற்றித் தென்னிந்தியாவில் நிலவும் கதைகளை விளக்கிய இவ்வறிஞர் சமூகவியல் நோக்கில் இதனை விளக்குகிறார்.

"பிராமணப் பெண்ணின் தலையும் தீண்டத்தகாத குலப்பெண்ணின் உடலும் இணைக்கப்படும் நிலையை இத்தெய்வத்தில் காண்கிறோம். இது அத்தெய்வத்தின் இருசார் நிலைப்பாட்டைக் காட்டுவதாகவும் கருதலாம்."

மாரியம்மன் வழிபாட்டின் ஆரம்பத்தளமாகத் தென்னிந்தியத் தமிழகமே இருந்திருக்கிறது. மிகப்பிரபலமாக விளங்கும் சமயபுரம் மகாமாரியம்மன், திருவேற்காடு கருமாரியம்மன், தஞ்சாவூர் முத்துமாரியம்மன் முதலிய கோயில்களும் இதனை எடுத்துக்காட்டுகின்றன.

சுமார் இருபது நூற்றாண்டுகளாக இந்துப்பண்பாட்டுக் கூறுகள் நிலைபெற்றிருக்கும் தென்கிழக்காசிய நாடுகளில் மாரியம்மன் கோயில்கள் நிறையக் காணப்படுகின்றன. வட சுமாத்திராவில் மட்டும் இருபத்தொரு மாரியம்மன் கோயில்கள் இருப்பதாக ஆத்ம ஜோதி முத்தையா அவர்கள் தகவல் தருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூர் நாட்டில் மாரியம்மன் கோயில் தேசியப்பெருமை வாய்ந்ததாகப் பேணப்படுகிறது. "சிங்கப்பூர் மாரியம்மன் கோயில் நமது பண்பாட்டின் தேசியச் சின்னமாகப் பாதுகாக்கப்படும்" என 18/06/1973இல் சிங்கப்பூர் அரசாங்கம் கசற் வெளியீட்டில் அறிவித்துள்ளது.

"1819இல் சிங்கப்பூரை ஸ்தாபித்த சர் ஸ்டாம் போட் ராபிள்கள் என்பார் சிங்கப்பூரில் அடியெடுத்து வைக்குமுன்னரே அங்கு மாரியம்மன் கோயில் இருந்திருக்கிறது''எனக் குறிப்பிட்டுள்ளார் திரு முத்தையா அவர்கள்.

"சிங்கப்பூரில் காளியம்மன், மாரியம்மன், மகாகாளியம்மன் ஆகிய சக்தி கோயில்கள் நிரம்ப இருக்கின்றன" என்கிறார் வை. கணபதி ஸ்தபதி அவர்கள்.

இந்தோனேஷியாவிலுள்ள மேடான் ஸ்ரீ மாரியம்மன் கோயில் மிகப் பிரபலாமானது. இந்நாட்டிலுள்ள சகல சமயச் செயற்பாடுகளும் இந்த மாரியம்மன் கோயில் பரிபாலகர்களதும் குருமாரதும் ஆலோசனைகளை முன்னிட்டே செய்யப்படுகின்றன.

இன்று மேற்குலக நாடுகளிலும் இந்துப் பண்பாட்டம்சங்கள் வெகுவேகமாகப் பரவி வருகிறது. அங்கும் பல மாரியம்மன் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை தமிழகத்தின் நேரடித் தொடர்பினால் மலையகத்தில் மாரியம்மன் வழிபாடு மிக அதிகம்.

"இலங்கையில் மலையகம் ஏறத்தாழ 160வருடங்களாகத் தனக்கெனத் தனித்துவமான பண்பாட்டம்சங்களைப் பேணி வந்தள்ளது. அவ்வகையில் சமய நிலையிலான வழிபாட்டு முறைமைகளுக்கும் முதன்மையளித்துப் போற்றி வந்துள்ளது.

"தமிழ் நாட்டிலிருந்து சென்ற நூற்றாண்டு முதலாகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களாகப் புலம்பெயர்ந்து வந்த மக்கள் தமது இயல்பான வழிபாட்டு அடிப்படைகளையும் பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணியொழுகி வந்துள்ளனர். அவ்வகையில் முத்து மாரியம்மன் வழிபாடு இம்மகளிடையே குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது"

எனக் குறிப்பிடும் கலாநிதி துரை மனோகரன் அவர்கள் கேகாலை மாவட்டத்திலுள்ள 16 வழிபாட்டுத்தலங்களில் 12 அம்மனுக்குரியவை எனவும் இரத்தினபுரி மாவட்டத்தில் எட்டு மாரியம்மன் கோயில்கள் உள்ளன எனவும் கண்டி மாத்தளை மாவட்டங்களில் 36 வழிபாட்டுத் தலங்களில் 21 முத்துமாரியம்மன் கோயில்கள் எனவும் குறிப்பிடுகிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக் கோயில்கள் பற்றி எழுதிய வித்துவான் பண்டிதர் வீ.சி கந்தையா அவர்கள் பிரபலமான மாரியம்மன் கோயில்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறார்.

கொத்துகுளம் மாரியம்மன் கோயில், கோட்டை முனை புன்னையம்பதி மகாமாரியம்மன் கோயில், வெல்லாவெளி முத்துமாரியம்மன் கோயில் ஆகிய இம்மூன்று கோயில்களும் இந்தியத் தொடர்பை உடையன. இக்கோயில்கள் தொடர்பாக மாரியம்மன் உற்பத்தி, மாரியம்மன் காவியம், மாரியம்மன் தவநிலைப்பாடல்கள், மாரியம்மன் அகவல், மாரியம்மன் அந்தாதி, மாரியம்மன் தாலாட்டு, மாரியம்மன் திருக்குளிர்த்தி, மாரியம்மன் ஊஞ்சல், மாரியம்மன் வீதி உலா முதலிய பாடல்கள் மரபு வழியாகப் பாடப்பட்டுவருகின்றன.

எனவே, இதுகாறும் நோக்கியவற்றிலிருந்து பௌராணிக மரபில் தோன்றிச் சிவாகம மரபிலெழுந்து இன்றுவரை பேணப்படும் உயர் தெய்வமாகிய சீதாளா கௌமாரி, மஹாமாரி என்ற பெருந் தெய்வமாகவும் நோய் பிணி துன்பத்தைப் போக்கி வெப்பமகற்றிக் குளிர்மையூட்டும் மழைத் தெய்வமாயிருந்து சேரிவாழ் பாமரமக்களைக் காத்துவரும் முத்துமாரித் தெய்வம் என்னும் கிராமியத் தெய்வமாகவும் ஒரு சேர விளங்கும் பராசக்தியின் அம்சம் மாரியம்மனாகச் சாதாரண மக்களைக்காக்கத் தோன்றி வளர்ந்தவாற்றை அறிந்து கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் சமூகவியல் நோக்கில் பெண்களுக்குள்ள ஒழுக்கம், கற்பியல், நடத்தை பற்றிய சிக்கல்களையும் எடுத்துக் காட்டுவதுடன் ஒழுக்கம் குறைந்தால் தெய்வமாயினும் தண்டிக்கப்படுவாள் என்பதும் இக்கதையின் உட்குறிப்பாகுமோ எனவும் சிந்திக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகமக் கிரியை மரபில் மாரியம்மன் வழிபாடு

ஆகம நெறிமுறையிலமைந்த உயர்நிலை வழிபாடு, சாதாரண மக்களின் கிராமிய வழிபாடு எனும் இருசார் நிலைப்பாடு களையும் இணைத்து நிற்பதும் தமிழர் வாழ்கின்ற தேசமெங்கும் இன்றளவும் பரந்தோங்கி வளர்ந்து நிலை பெற்றிருப்பதும் ஆகிய மாரியம்மன் வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி பற்றி முன்னர் ஆராயப்பட்டது.

## சிவாகம மரபில் மாரியம்மன்

சைவசமய வழிபாட்டு நெறியில் சிவாகமங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. உருவ வழிபாடும் அதற்கு நிலைக்களனாயுள்ள ஆலயங்களும் இல்லாமல் இந்து நாகரிக மரபே இல்லை எனும் அளவுக்கு இந்து சமயத்தின் உட்பிரிவுகளான சைவம், வைஷ்ணவம் முதலிய யாவுமே தத்தமக்குரிய ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டே நிலைபெற்றிருப்பதுடன் வளம்பெறவும் செய்கின்றன.

இவ்வகையில் சைவசமயமென்ற தனிப்பெரும் சமய நெறியின் வழிபாட்டு முறைகளும் தத்துவ சிந்தனைகளும் சிவாகமங்கள் இருபத்தெட்டையும் உபாகமங்கள் இருநூற்றேழையும் தமது அடிப்படை நூல்களாகக்கொண்டே வளர்ந்துள்ளன.

எனவே இன்றைய நிலையில் எந்த ஒரு வழிபாட்டு முறையை எடுத்துக்கொண்டாலும் அதில் காணப்படும் ஆகமச் சார்பு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். சிவபிரானது ஐந்து திருமுகங்களிலிருந்தும் உற்பத்தியாகி ஸ்ரீகண்ட ருத்திரர் போன்றோருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையுடைய இவ்வாகமங்கள் ஆதியந்தமின்றி இவ்வுலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் நிலவி வருபவை என்ற கருத்து சைவர்களிடையே உண்டு.

இவை நூலாக்கம் பெற்ற காலம் கி.பி.5ம் 6ம் நூற்றாண்டுகளில் என ஆய்வாளர்கள் பலர் கருதுகின்றனர். (இது சிவாகமங்களின் பின்னெல்லையேயாகும்)

இச் சிவாகம மரபில் வாஸ்து சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம் என்பன கூறும் விதிமுறைப்படி அளவுப் பிரமாணங்களுக்கமைய ஆலயங்கள் கட்டப்பட்டு அங்கு உரிய தோற்றப் பொலிவுகளுடன் திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. சிவப்பிராமண குலத்தில் உதித்த ஆதிசைவ சிவாசாரியப் பெருந்தகைகளால் இங்கு பூஜை, உற்சவம் முதலியன நிகழ்த்தப்படுகின்றன. சிவன், முருகன், கணபதி, அம்பிகை முதலிய பல்வேறு தெய்வங்களுக்கும் தனித்தனியே கோயில் அமைத்து வழிபடும் மரபு காலப் போக்கில் நிலைபெற்றிருக்கிறது.

சிவாலயங்களிலே ஒரு சந்நிதானத்திலே இடம்பெற்றிருந்த சக்தி வடிவம் இதனால் தனியான ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படலானதும் சக்தியின் பல்வேறு வடிவங்களான புவனேஸ்வரி, சிவகாமி, காளி, துர்க்கை முதலியன அங்கு முன்னணிக்கு வரலாயின. இவ்வகையில் மாரியம்மனும் தனியிடம் பெறுவதைக் காணலாம்.

பௌராணிக மரபில் சீதளா தேவியாகவும் ரேணுகா தேவியாகவும் உருப்பெற்றுக் கிராமிய வழிபாட்டு மரபில் முத்துமாரியாக வளம்பெற்று வந்த மாரியம்மன் வழிபாடு ஆகமங்களில் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. *உத்தர காரணாகமம்* மாரியம்மனுக்குரிய பிரதிஷ்டா விதியை விரித்துக் கூறுகிறது. இதைவிட *ருத்ரயாமளம், லலிதாகமம், நவயாமள சங்கிரகம்* என்பவற்றிலும் மாரியம்மனுக்குரிய பிரதிஷ்டை, உற்சவம் என்பன பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

*உத்தர காரணாகமம்* 95 ஆவது படலமாக மஹாமாரீ பிரதிஷ்டா விதி அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதாதஸ் ஸம் ப்ரவக்ஷ்யாமி ஜ்வர பீடா நிவாரணம்*
*ஸ்போடகாதி ப்ரசமனம் சர்வலோக பயங்கரம்*
*மாரா சுரேண பலினா பீடிதே ச ஜகத் த்ரயே*
*மாராசுர வதம் பூர்வம் மஹாமாரீதி நாமத*

என்று ஆரம்பிக்கும் இப்பகுதி *"மூவுலகையும் துன்புறுத்திய மாராசுரனை வதம் செய்ததால் மஹாமாரி எனப் பெயர்பெற்ற தேவியின் பிரதிஷ்டையை நோய்கள் துன்பங்களின் நீக்கத்துக்காகக் கூறுகிறேன்"* என்று கூறுகிறது.

மாரியம்மனின் திருவுருவத் தோற்றமும் பூஜை முறைகளும்

சாந்தமானவளாகவும் முக்கண்களும் நான்கு கரங்களும் உடையவளாகவும் தீச் சுவாலை போன்ற அக்னிஜடை உடையவளாகவும் கபாலம், கத்தி, பாசம், உடுக்கு ஆகியவற்றை ஏந்தி தாமரைப் பீடத்தில் இருப்பவளாகவும் வலதுகால் தொங்கவிட்டு இடதுகால் மடித்து வைத்திருப்பவளாகவும் பாம்பைப் பூணூலாக அணிந்து எல்லா அணிகலன்களும் தரித்த கோலத்தில் மாரியம்மனின் திருவுருவத்தை *உத்தர காரணாகமம்* வர்ணிக்கிறது.

கிராமத்தின் ஈசானம், கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகியவற்றுள் ஏதாவதொரு திக்கில் ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யுமாறு கூறும் இப்பகுதியில் விரிவான கும்பாபிஷேகக் கிரியைகள் சொல்லப்படுகின்றன. கிழக்கு முதல் எட்டுத் திசைகளுக்கும் உள்ள கும்பங்களில் பூஜிக்க வேண்டிய தெய்வங்களையும் இங்கு விபரிக்கிறது. முதலாவது ஆவரணத்தில் சம்ஹிதா மந்திர தேவதைகளும் இரண்டாவது ஆவரணத்தில் காளி, காலராத்ரி, பத்ரா, கோமளீ, யாமளீ, பாசாங்கீ, சகோரா', ஷட்கோண வாசினீ ஆகியோரும் மூன்றாவது ஆவரணத்தில் பிருதுவி, அத்பினீ, தேஜஸ்வீ, வாயவீ, ஆகாசீ, ஆதித்யா, சந்த்ரா, யஜமானனீ ஆகியோரும் நான்காவது ஆவரணத்தில் லோக பாலர்களும் ஐந்தாவது ஆவரணத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஜ்ரம் முதலிய ஆயுதங்களும் கூறப்படுகின்றனர்.

பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் ஆதிசைவரால் நிகழ்த்தப்பட வேண்டுமென்றும் நித்ய பூஜைகள் பாரசைவரால் செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருப்பதோடு இறுதியில் மிருகபலியும் குறிப்பிடப்படுகிறது. ஆகமங்கள் சாத்வீகமான பூஜையைச் சொல்வதே மரபென்பதால் இப்பகுதி இடைச் செருகலாயிருக்குமோ என்ற ஐயமும் எழுகின்றது. இங்கு பலிகொடுத்தல், சைவக்குருமார் மூலம் நித்ய பூஜை செய்வித்தல் என்பன கிராமிய வழிபாட்டு முறையிலிருந்து தரமுயர்த்தப்பட்டதற்கான அடையாளமாகக் கொள்ளமுடியும்.

இனி, *ருத்ரயாமளத்*தில் கூறப்பட்டுள்ள மஹாமாரி ஸ்தாபன விதியை நோக்கின் இதுவும் காரணகாமத்தை ஒத்திருக்கின்றது. ஒன்பது நாள் யாகம் உத்தமமானது. நவகுண்டம் இடும் பட்சத்தில் எட்டு யோனிகுண்டங்களும் பிரதானம் விறுத்தகுண்டமாகவும் அமைக்கலாம்.

*ருத்திரயாமளத்*தின்படி இரண்டாவது ஆவரணத்தில் வாமா முதலிய எட்டுச் சக்திகள் இடம்பெறுகின்றார்கள். இங்கும் பிரதிஷ்டை உற்சவம் ஆதிசைவராலும் நித்யபூஜைகள் பாரசைவராலும் செய்யப்பட வேண்டும் எனப்படுகின்றது.

*யாமளா சாஸ்திரம்* என்ற நூலில் பிரதிஷ்டாதந்திரம் என்ற பகுதியில் ரேணுகாதேவி பிரதஷ்டை சொல்லப்படுகிறது. இங்கு மத்தியில் ரேணுகா கும்பமும் இடப்புறத்தில் மந்திரசக்தி கும்பமும் வைத்து எட்டுக் கும்பங்களில் வாமாதி அஷ்ட சக்திகளையும் பூஜிக்குமாறு செல்லப்படுகின்றது.

மாரிக்கு இரண்டு, நான்கு, எட்டுக் கரங்களுடன் ரூபபேதங்கள் காணப்படுகின்றன. இதனடிப்படையில் அஷ்டபுஜ மாரியம்மன் என்ற பெயரில் எட்டுக் கரங்களுடன் ஒரு மாரியம்மன் தோற்றம் வர்ணிக்கப்படுகின்றது. இவ்வடிவத்திற்குரிய தியான சுலோகமோ சிற்ப சாஸ்திர விளக்கமோ இவ்வாய்வில் பெறமுடியவில்லை. இவடிவம் எங்கும் சிறப்பமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமைக்கப்பட்டிருப்பாதாகவும் தெரியவில்லை. ஆனால், பருத்தித்துறை அல்வாய் முத்துமாரியம்மன் கோயிலில் இத்தகைய ஓவியமொன்று சுவர்ச்சித்திரமாக வரையப்பட்டிருக்கின்றது.

லலிதாகாமத்தில் பெறப்பட்ட பத்ததிகளில் சீதளா கௌமாரி பிரதிஷ்டை என்ற பகுதி காணப்படுகின்றது. இதுவும் ஏற்கெனவே பார்த்தவற்றையொத்ததாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு ஆகமங்களில் ஆராயும் போது ரேணுகா தேவி அல்லது சீதளா கௌமாரி அல்லது மஹாமாரி என்ற பெயரில் சிறப்பான ஒரு பரிவார தெயவமாகவோ அல்லது தனிக்கோயில்களில் ஆராதனை செய்யப்படும் தெய்வமாகவோ பிரதிஷ்டை செய்வதற்கான விதிமுறைகளை நாம் காணமுடிகிறது. இன்னொரு முக்கிய சிறப்பு இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

சிவாலயங்களுடன் உள்ள தொடர்பு.

பெரும்பாலான சிவாலயங்களுக்கு மிக அருகில் மாரியம்மன் கோவில்கள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இதற்கு ஆகமங்களில் நேரடிக் குறிப்புகள் எதுவும் இல்லை. யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலும், வல்வெட்டித்துறையிலும் இதற்கான உதாரணத்தை நாம் காட்டலாம். இன்னும் சில சிவாலயங்களில் மாரியம்மனுக்குத் தனியான சந்நிதியோ தனியாக விக்கிரமோ இருக்கும். சுன்னாகம் சிவன்கோவில் இதற்கு நல்ல உதாரணமாக கொள்ளலாம்.

சுன்னாகம் சிவன்கோவில், வல்வெட்டித்துறை சிவன் கோவில் ஆகியவற்றில் மூலவராகிய சிவனுக்கு மஹோற்சவம் ஆரம்பிக்கும் முன் மஹாமாரியை வழிபாடு செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. கொடியேற்றத்திற்கு முன்னர் மாரியம்மன் உற்சவம் எனத்தனியாகத் திருவிழா நடைபெறுகிறது. சுன்னாகம் சிவன்கோவிலின் அருகில் மாரியம்மன் கோவில் எதுவுமில்லை. எனவே அங்கேயே விசேட வழிபாடு நடைபெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டித்துறை சிவன் கோவிலின் அருகில் பிரபலமான முத்துமாரி அம்மன் கோவில் உண்டு. அவ்வாலயத்திற்கு ஊர்வலமாகச் சென்று விசேட வழிபாடுகள் நடத்துகின்றனர்.

கிரியா பத்ததிகளில் மாரியம்மன் வழிபாடு.

சிவாகமங்களில் கூறப்பட்டிருக்கும் கிரியைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக ஆகமங்களின் சார்பு நூல்களாகிய கிரியா பத்திகள் தோன்றின. ஈசான சிவாச்சாரியார், அகோர சிவாச்சாரியார், சோமசம்பு சிவாச்சாரியார் முதலியோரால் உருவாக்கப்பட்ட பதினெண் பத்திகள் இவ்வாறு வழக்கிலிருந்தன. இவை கிரியைகளின் ஒழுங்கு முறை - கிரியைகளின் போது சொல்ல வேண்டிய மந்திரங்கள் ஆகியவற்றையும் இறைதிருவுருவங்களுக்குரிய தியான சுலோகங்கள் என்பவற்றையும் கொண்டிருக்கும்.

இப்பத்ததிகளின் சார்புநூல்களாகப் பல சிவாச்சாரியார்கள் தத்தமது ஆலயங்களுக்கேற்ற வகையில் பத்திகளைக் கையெழுத்துப் பிரதிகளாக உருவாக்கி வைத்திருந்தனர். இவற்றுட் பல இன்று அச்சுவாகனமேறியுள்ளன.

இவ்வகையில் மாரியம்மனுக்குரிய பத்ததிகளாக இன்று பயன்படுத்தப்பட்டுவரும் பிரதிகள் பல இவ்வாய்வின் போது ஆராயப்பட்டன. அச்சில் வெளிவந்த சில நூல்களும் பல சிவாச்சாரியார்களிடமிருந்த கைப்பிரதிகளும் இதிலடங்கும்.

பொதுவாக யாக மண்டப பூஜை நடைபெறும் போது இன்றைய நடைமுறையில் பூர்வம், தக்ஷிணம், உத்தரம், பச்சிமம் என்ற ஒழுங்கில் துவாரபூஜைகள் செய்யும் போது அந்தந்த வாசலுக்கருகிலிருக்கும் மூன்று கும்பங்களுக்குப் (வலதுபுறத்தில் இரண்டு இடதுபுறத்தில் ஒன்று என) பூஜை செய்வது மரபு. ஆனால் இன்று கிடைக்கும் பெரும்பாலான மாரியம்மன் பத்ததிகளில் நான்கு துவார பூஜைகளும் முடித்து யாக சாலைக்குள் பிரவேசித்த பின்னரே இருபத்தேழு கும்பங்களுக்குரிய பூஜை கூறப்படுகிறது. இது பற்றி விசாரிக்கும் போது பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியத்தில் எல்லாத் தெய்வங்களுக்கும் இவ்வாறே யாகபூஜை நடத்தும் மரபு இருந்திருக்கிறது என தர்மசாஸ்தா குருகுல அதிபர், சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் அவர்கள் தெரிவித்தார்.

இதன் மூலம் ஒரு விடயத்ததை உணர முடிகிறது, ஏனைய பத்ததிகள் காலக்கிரமத்தில் புதிய மாறுதல்கள் சிலவற்றைப் பெற்றிருக்கின்ற போதிலும் மாரியம்மன் பத்ததிகள் இறுக்கமான மரபு முறை பேணும் வழக்கத்தை அநுசரித்திருக்கின்றன என்பதே அது.

ஏற்கனவே வேறொரு இடத்தில் குறிப்பிட்டவாறு, மாரியம்மன் முக்கண்ணும் நான்கு கரங்களும் கொண்டவளாக மானிடத் தெய்வ நிலைக்கு அப்பால்- உயர் தெய்வநிலையில் இன்று ஆலயங்களில் போற்றப்படுவதால் பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் முதலிய சகல கிரியைகளும் நடைபெறுகின்றன. முக்கியமாகப் பெரும்பாலான மாரியம்மன் ஆலயங்களில் மஹோற்சவம் நடைபெறுகிறது. அதற்கேற்ற வகையில் பல மாரியம்மன் ஆலயங்களில் சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் பலவும் கைவிடப்பட்டுள்ளன. முக்கியமாகப் பலியிடுதல் முதலியன முற்றாக விலக்கப்பட்டுச் சைவாகம மரபு முறை பேணப்படுகிறது.

தியான சுலோகங்களின் அடிப்படையில் திருவுருவ வேறுபாடுகள்.

ஒரே தெய்வத்திற்குப் பல்வேறு பிரதிமாலக்ஷணங்கள் சொல்லப்படுவது உண்டு. ஒரே பிரதிமாலக்ஷணத்துக்குப் பலவேறு தியானங்கள் வழங்கப்படுவதும் உண்டு. தியான சுலோகங்களை அடிப்படையாகக் கொண்டே விக்கிரகங்கள் உருவாக்கப்படுகின்றன. எனவே சிவாகம மரபில் திருவுருவ வழிபாட்டில் தியான சுலோகங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

தியான சுலோகங்கள் பத்ததி வேறுபாடுகளுக்கு இணங்க வேறுபடுகின்றன. சில வேளைகளில் காலங்காலமாகப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணப்பட்டு வருகையில் பாடபேதங்கள் ஏற்பட்டிருப்பதும் உண்டு. இவ்வேறுபாடுகள் தோற்றப் பொலிவில் மாற்றமின்றிச் சொற்பிரயோகத்தில் மட்டும் மாறுபடுவதுண்டு. சில வேளைகளில் தோற்றப் பொலிவில் கூட மாற்றம் ஏற்படுவதுண்டு.

உத்தர காரணாகமம் மாரியம்மனைப் பின்வருமாறு விரிவாக வர்ணிக்கிறது.

*த்ரிநேத்ரா சதுர்புஜா சாந்தா கராள வதனான்விதா*
*ஜ்வலோர்த்வ கேசினீ ரக்தா கபால கட்க பாசினீ*
*டமருந் தார்யதே சைவ பத்ம பீடோபரிஸ்ததா*
*சயனம் வாம பாதந்து லம்பிதம் சவ்ய பாதகம்*
*க்ருஷ்ண வஸ்த்ர சமாயுக்தா நாக யஜ்ஞோப வீதிநம்*
*தாடங்கம் தக்ஷிணே கர்ணே வாமே லம்ப சமன்விதாம்*
*சர்வாபரண பூஷ்யஞ்ச ப்ரபா மண்டல மத்யகாம்*
*ஏவம் சங்கல்ப்ய விதிவத் ப்ரதிஷ்டாம் காரயேத் தத:*

(உத். கார. 95-3-6)

"முக்கண்ணும், நான்கு கரங்களும், அகன்ற முகமும், அக்கினிகேசமும், செந்நிறமும், சாந்த சொரூபமும் கொண்டவளாக கத்தி, கபாலம், பாசம், டமருகம என்பவற்றை நான்கு கைகளிலும் கொண்டவளாக, தாமரைப் பீடத்தில் இடதுபாதம் மடித்து வலதுபாதம் தொங்கவிட்டவாறு கரிய ஆடையுடன் நாகபாம்பைப் பூணூலாக அணிந்தவாறு சர்வாபரண பூஷிதையாக" இங்கு மாரியம்மன் வர்ணிக்கப்படுகிறாள்.

ருத்யாமளத்தில்,

*த்ரிநேத்ராம் சதுர்புஜாம் சௌம்யாம் ரக்தவர்ணாம் சு யௌவனாம்*
*கட்கம் கபால சம்யுக்தாம் பாசம் டமருகம் ததா*
*மஹாமாரீ ஸ்வரூபந்து முக்தாதிபிரலங்கிருதாம்.*

எனவரும் தியான சுலோகம் அதே தோற்றப் பொலிவை வர்ணிக்கிறது.

ஈசான சிவாச்சார்ய யாமளாச்சார்ய பத்ததியிலிருந்து பிரம்மஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியரால் கும்பகோணம் ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலவிலாச அச்சியந்திர சாலையில் 1929ம் ஆண்டில் அச்சிடப்பட்ட கிரந்தப் புத்தகமாகிய இந்நூலில் மஹாமாரி, பத்திரகாளி, சாஸ்தா, மஹாகாளர் ஆகியோரின் பிரதிஷ்டைகளுடன் தனியாக ரேணுகாதேவியின் பிரதிஷ்டையும் சேர்ந்துள்ளது. மஹாமாரியும் ரேணுகா தேவியும் ஒரே தேவியர் இல்லையா? என்ற சந்தேகம் அதனால் எழுகிறது. இதிலிடம் பெறும் ரேணுகாதேவி தியானம் பின்வருமாறு:

*நாநாவர்ண விராஜிதாம் த்ரிநயனாம் பத்மாசனே சம்ஸ்திதாம்*
*பிம்போஷ்டீம் ரக்தவஸ்த்ராம் ம்ருகமத திலகாம் ரேணுகாம் மந்த்ரவீணாம்*
*கர்ணோத்யத் ரக்தபுஷ்பாம் கடினகுசபராம் துங்கநாசா சுகேசீம்*
*த்யாயேத் நூபுர மேகலா தடிலசத் பாதௌ கடிகஞ்சுகாம்*
*ஹஸ்தானி த்ருதமாயுதானி குசலம் காலாக்னி கோடித்யுதிம்*

இங்கு கூறப்படும் தியானத்தில், "நாநாவர்ணமுடையவளாகவும் சிவந்த வஸ்த்திரம் அணிந்து முக்கண்களுடனும் கஸ்தூரித் திலகத்துடனும் எடுப்பான நாசியும் கடினமான தனபாரமும் கொண்டவளாகவும் இடுப்பில் மேகலையும் செம்பஞ்சுக்குழம்பு பூசிய பாதங்களில் காற்சிலம்பும் அணிந்தவளாக" வர்ணிக்கப்படுகிறாள். வேறு தெளிவான செய்திகள் கிட்டவில்லை. லலிதாகமத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட கைப்பிரதி ஒன்றில் காணப்படும் சீதளா கௌமாரி பிரதிஷ்டையில் சீதளா கௌமாரி தியானம் முக்கண்ணும், நான்கு கரமும் கொண்டதாகச் சொல்லப்பட்டிருப்பதோடு பாசம், டமருகமும் கூறப்படுகிறது. எனினும் ஏனைய இரு கரங்களில் அபயவரதம் கூறப்படுவதும் மயில்வாகனம் கூறப்படுவதும் முரண்பட்ட உருவ அமைப்பாகும்.

இவ்வாறு காணப்படும் மாறுபட்ட தியானங்கள் விரிவான ஆய்விற்குரியவை. பத்ததிநூல்களிலும், அர்ச்சனை நூல்களிலும் இன்னும் பல மாரியம்மன் தியானங்கள் காணப்படுகின்றன. அவை இந்நூலில் அநுபந்தமொன்றில் தொகுத்து தரப்படுகின்றன.

மிருகண்டு முனிவரால் செய்யப்பட்டதாகக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படட்டுள்ள மஹாமாரி அஷ்டோத்திர சதநாமாவளியில் 'வைதவ்ய ரூபிணீ' (விதவைக் கோலம்) என்ற நாமம் அவளது ரேணுகாதேவி வடிவத்துடன் ஒத்துப் போகிறது. 'கிராம சுகப்ரதா' (கிராமத்துக்கு நன்மையளிப்பவள்) என்பது கிராம தேவதையாக இருப்பதைக் காட்டுகிறது.

அதே முனிவரால் சொல்லப்பட்ட சஹஸ்ர நாமவளியில் மாரியம்மனின் 'மாம்சபக்ஷிணீ', 'சுராபான மோதினீ' என்ற நாமங்கள் அவளது கிராமிய வழிபாட்டுநிலைகளைக் காட்டுவனவாகவும் 'விப்ரபூஜிதி' (அந்தணர்களால் பூஜிக்கப்படுபவள்) என்பது அவளது உயர்நிலை வழிபாட்டைக் காட்டுவதாகவும் அமைகின்றன.

இந்த இயலில் சிவாகம மரபில் தோன்றிக் கிரியா பத்ததிகளினூடு வளர்ந்து இன்று நிலைபெற்றிருக்கும் மாரியம்மன் வழிபாட்டு முறைகள் கூறப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்- 4

# ஆகமம் சாரா வழிபாட்டு மரபுகளில் மாரியம்மன்

ஆகமம் சாரா வழிபாட்டு முறை எனப்படும் கிராமிய வழிபாட்டு மரபில் மாரியம்மன் பெறும் முக்கியத்துவம் இங்கு ஆராயப்படுகிறது. கிராமிய மரபில் மாரியம்மன் பெரிதும் முத்துமாரி என்றே அழைக்கப்படுகிறாள். அதைவிட மாரியாயி, மகமாயி, மாரியாத்தா, முதலிய பெயர்களாலும் அன்போடு கூறப்படுகிறாள். ஆகம மரபில் போலவே இங்கும் நோயுடன் தொடர்புபடுவதை அவதானிக்கலாம்.

மாரி என்ற பெயருக்கேற்ப மழையோடும் இவள் தொடர்புபடுகிறாள். வெப்பு நோய்களைத் தீயவர்களுக்கு வழங்கி அவர்களைத் தண்டித்துத் திருத்திப் பின் மழையாகப் பொழிந்து குளிர்வித்து அரவணைத்து அருள்செய்யும் தாயாக இவளை மக்கள் கருதுகின்றார்கள். காளி, துர்க்கை முதலிய போர்த் தெயவங்கள் போல உக்கிர மூர்த்தியாக இல்லாமல் சாந்த மூர்த்தமாகவே அவளைக் காண்கின்றனர். ஆகம மரபிலும் சாந்தா, சௌம்யா, என்ற அடைமொழிகள் வழங்கப்பட்டிருப்பதை நோக்கலாம்.

பொதுவாகப் பழந்தமிழ் மக்கள் மாரியம்மனை இருவகைக் குணமுடையவளாகப் போற்றினர்.

1. மழை தரும் அருளன்னை.
2. பகைவரை அழிக்கும் ஆவேச அன்னை

முதல் வகைக்கு உதாரணமாக:

“கலகலன்னு மழை பேயக்
கல்லும் நீரும் கலந்தோட
கணக்காய் நிக்கிற முத்தாளுக்கு
கல்லோலை மின்னுது பாருங்கடி



- கோப்பாய் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொடு மொடுன்னு மழை பேய
முச்சந்தி நீரும் பாய்ந்தோட
முடுக்காய் நிக்கிற முத்தாளுக்கு
முருகு மின்னுது பாருங்கடி."

என்ற நாட்டுப்பாடலையும், இரண்டாவது வகைக்கு உதாரணமாக:

"வீரியம் பேசி வந்த வீரர்களை வெற்றி கொண்ட
மாரியம்மா எப்போது வந்திறங்க வேணுமம்மா.........."
"பரிகாசம் செய்தவரைப் பல்லைப் பிடுங்கி வைப்பாய்......"

என்ற நாட்டுப்பாடலையும் எடுத்துக் காட்டலாம்.

பண்டைத் தமிழரிடையே மழைவளம் குறைந்த பிரதேச மக்கள் மழை வேண்டி மாரியை வழிபட்டனர். வரண்ட பிரதேசமாதலால் நீண்ட தூரம் சென்று நீரெடுத்து வந்ததன் சின்னமாகவே கரகமெடுத்தல் என்ற வழிபாட்டு முறை மாரியம்மனுடன் தொடர்புபடுகிறது.

தாம் முன்பு செய்த பாவங்களால் மழையின்மையும் வறுமையும் வருகின்றன என எண்ணிய மக்கள் தம்மை வருத்திப் பிராயச்சித்தம் செய்து வழிபட்டனர். அதனால்தான் கரகம், காவடி, அலகுகுத்தல், தீ மிதித்தல், போன்றன வழிபாட்டு முறையில் ஏற்பட்டன. இவ்வேளையில் அன்னையின் இரக்கத்தைத் தூண்டுதற்காகப் பாடல்கள் பாடப்பட்டன.

"ஒன்றாங் கரகமடி - கன்னி
ஓகோ என் தாயே
ஓடியாந்து பூசை வாங்கு இப்போ தாயே
ரண்டாங் கரகமடி - கன்னி
ஓகோ என் தாயே
ரண கரகம் பொன்னாலே இப்போ தாயே"

இன்னொருவிதமாக வேண்டுதல் பாடல்கள் பாடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரசினில் முத்தையம்மா தற்காத்து நீயிறக்கு
முகத்தினில் முத்தையம்மா முன்னதாய் நீயிறக்கு
கழுத்தினில் முத்தையம்மா கட்டழுகி நீயிறக்கு
தோளினில் முத்தையம்மா துரந்தரி நீயிறக்கு

உடல் முழுதும் கொப்புளங்கள் போட்டிருக்கும் அம்மன் நோய் எனப்படும் வெப்பு நோய்களுக்கு இன்று வரை வேறு மருந்துகள் இன்றி மாரியம்மன் கோவில் மடத்திலே வந்து தங்கியிருந்து மேற்கண்ட பாடல்களைப் பாடி நோயை மாற்றுவது வழக்கமாய் உள்ளது. வேப்பிலையை அரைத்து மருந்தாக பூசுவதும் உண்டு.

மாரியம்மனுக்கு நேர்த்தி வைத்து நோய் தீர்ந்ததும் நேர்த்திக் கடன் தீர்த்தல் மிகப்பரவலாகக் கிராமிய மக்களிடையே காணப்படுவதாகும். அந்த நேர்த்திக் கடன் தீர்த்தல் முன்குறித்தாவாறு காவடி, தீமிதித்தல் போன்றவையாகவும் இருப்பதுண்டு. பொங்கல், குளிர்த்தி, முதலியனவாகவும் அமைவதுண்டு. பொங்கல் பொங்கி மடைபரவுதலும் நீர்மோர், நீர்ச்சாதம் என்பன தயாரித்தலும் படைத்தலும் பொதுவாகக் கிராம மக்களிடையே வழங்கும் மரபாகும்.

கும்மியடித்தல், காவடியாடுதல், போன்றனவும், பறைமுழங்குதலும் பல இடங்களில் நடைமுறையில் உள்ளன. மஞ்சள் நீராடுதல் சேவல் பலியிடல் என்பனவும் தமிழ் நாட்டில் சில இடங்களில் உண்டு

இலங்கையின் மலையகப்பகுதியில் மாரியம்மன் வழிபாடு மிகப்பரவலாக உண்டு. இவற்றில் நகர்ப்புறக் கோவில்கள் சிலவற்றைத் தவிர ஏனைய கிராமப்புறக் கோயில்கள் யாவும் ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளையே கொண்டுள்ளன.

இங்கு நடைபெறும் வழிபாடுகளில் முதல் நாளன்று கரகம் பாலித்து அம்மனை அலங்கரித்துக் கோவிலக்குக்கொண்டு செல்வர். இரண்டாம் நாளன்று மாலையில் தேர்த் திருவிழா நடைபெறும். இத்திருவிழாவின் போது முனியாண்டி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தினை முன்னால் எடுத்தச் செல்லும் வழக்கம் உண்டு. மூன்றாம் நாள் தீமிப்பு, அன்னதானம், என்பவையும், இறுதி நாள் நீர்வெட்டு, மஞ்சள் நீராடுதல் என்பனவும் இடம்பெறும். காவடிகளும் இடம்பெறும். திருவிழா நடைபெற்று எட்டு நாட்கள் கோயில் பூட்டப் பெற்றிருக்கும்.

மாரியம்மன் திருவிழாவின் போது பெண்கள் கும்மி, கரகம், என்பன ஆடுவதுண்டு. அப்போது பல பாடல்கள் பாடப்படும். உதாரணமாக ஒரு பாடல்:

தங்கக் குடமெடுத்து முத்துமாரி
தண்ணிக்கே போகையிலே முத்துமாரி
தங்கச் சிறு தாலி முத்துமாரி
தலையே மறைக்குதம்மா
பொன்னு குடமெடுத்து முத்துமாரி
பொய்கைக்கே போகையிலே முத்துமாரி
பொட்டு சிறுதாலி முத்துமாரி
மறைக்குதம்மா.....

ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது
மாரிகடன் தீர்த்தவருக்கு மனக்கவலை தீருமம்மா

என்ற நாட்டார் பாடலடிகளின்படி மக்கள் நம்பிக்கையோடு நேர்த்திக் கடன் செய்வர். அம்மன் சந்நிதானத்திலிருக்கும் சூலாயுதத்தில் மஞ்சள் துணியில் பணத்தை முடிந்து கட்டினால் வேண்டுதல் பலிக்கும் என்ற நம்பிக்கையுண்டு.

மலையகப்பகுதியின் நகர்ப்புறக் கோவில்களில் மிகப் பிரபலமான மாரியம்மன் கோவில்களை இங்கு குறிப்பிடலாம். ஒன்று மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில். மற்றது நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில். இக் கோவில்களில் வேறுபட்ட சில நடைமுறைகளைக் காண்கின்றோம்.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் முற்றிலும் சிவாகம முறைப்படி அமைக்கப்பட்டு நித்திய நைமித்திகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக நடைபெறும் பாரிய ஒரு ஆலயமாகும். ஈழத்தின் மிகப் பெரிய ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். பஞ்சரதங்கள் பவனிவரும் புகழ்பெற்ற இவ்வாலயத்தில் சிவப்பிராமண குலத்தில் வந்த சிவாச்சாரிய மரபினரே நித்திய, நைமித்திகங்கள் செய்து வருகின்றனர். ஒரு சிவாலயம் போலவே இங்கு யாவும் நடைபெறுகிறது.

ஆனால் இங்கு காத்தவராயனுக்கு தனியான ஒரு பரிவாரசந்நிதி இருப்பதுடன் மதுரைவீரன், கருப்பண்ணசாமி, முதலிய சிறுதெய்வங்களுக்கும் சந்நிதிகள் இருப்பதும் பூஜை வழிபாடுகள் நடைபெறுவதும் வியப்பானதே!.

நாவலப்பிட்டி முத்துமாரி அம்மன் கோவிலும் சிவாகம விதிமுறைப்படியே அமைக்கப்பட்டிருக்கிறது. நித்திய பூஜைகள் சைவக்குருமாராலும் நைமித்திகங்கள் அந்தண சிவாச்சாரியார்களாலும் நிகழ்த்தப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் நித்திய பூஜைகளின் போதும் சிவாச்சாரியர்கள் மந்திரங்களை உச்சரிக்கச் சைவக் குருமார் கிரியை செய்வது வித்தியாசமான ஒரு நடைமுறையாகும்.

கொழும்பு மாநகரில்.......

இலங்கையின் தலைநகரான கொழும்பு மாநகரிலும் ஆங்காங்கே மாரியம்மன் கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோவில் குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு மாரியம்மன் வழிபாடு.

மட்டக்களப்புப் பகுதியில் பெரும்பாலும் மாரியம்மன் கோயில்களில் வீரசைவ மரபினர் பூஜைசெய்வர். பூசாரிகள் எனப்படும் கட்டாடிமார் சடங்குகளைச் செய்வர். உடுக்கு அடித்து மாரியம்மன் காவியம், மாரியம்மன் தாலாட்டு, மாரியம்மன் தவநிலை, மாரியம்மன் உற்பத்தி போன்ற பாடல்கள் பாடி உரு ஆடுதல் உண்டு. பொதுவாக ஆனிப் பூரணையில் விசேஷ விழாக்கள் நடைபெறுவது உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் எதிரே பெரிய பந்தலிட்டு யாக சாலை அமைத்துக் கழுமரத்தில் கழுவடிக்கிடா எனப்படும் தலைப் பலிக்கடா கட்டப்படும். நான்கு வாசல்களிலும் ஒவ்வோர் ஆடும் கோழியும் கட்டப்பட்டிருக்கும். இவை பலியிடப்படுகின்றன. இவ்வழக்கம் காலகதியில் நிறுத்தப்பட்டு பள்ளயம், சர்க்கரையமுது என்பன படைக்கப்படுகின்றன.

கொத்துகுளம் மாரியம்மன் கோயில், கோட்டைமுனை புன்னையம்பதி மகா மாரியம்மன் கோயில், வெல்லாவெளி முத்து மாரியம்மன் கோயில் என்பன குறிப்பிடத்தக்கன.

யாழ்ப்பாணத்து மரபு

யாழ்ப்பாணத்து மாரியம்மன் கோயில்கள் பலவற்றிலும் முன்னர் பலியிடும் வழக்கமும் மச்சம், மாமிசம், குடிவகை போன்றன படைக்கப்படும் வழக்கமும் இருந்திருக்கின்றன. பின்னர் இவை படிப்படியாக நிறுத்தப்பட்டு பொங்கல், மடை பரவுதல் என மாற்றம் பெற்றிருக்கிறது.

இன்று சிவாகம முறைப்படி ஆலயம் அமைத்து பிரதிஷ்டை நடத்தப்பட்ட மாரியம்மன் கோயில்களில்கூட மஹோற்சவம் ஒருபுறம் நிகழும் அதேவேளை நீர்க்கஞ்சியும் பொங்கலும் குளிர்த்தியும் நடைபெறுவதைக் காணலாம்.

மாரியம்மன் மகனாகிய காத்தவராயனை முதன்மைப் படுத்திக் காத்தவராயன் கூத்து யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் நிலவுகிறது. மாரியம்மன் கோயில் வீதிகளில் நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்காக இக்கூத்தினை மேடையேற்றும் வழக்கமும் உண்டு. இதனை வெறும் நாடகமாகக் கருதாமல் ஒரு புனிதமான வழிபாடாகவே கருதிப் பழகும் காலத்திலிருந்து மேடையேற்றப்படும் காலம்வரை பயபக்தியுடன் இதில் ஈடுபடுவார்கள். விரதமிருத்தல் அல்லது சுத்த போசனத்துடனிருத்தல் முதலியன இவர்களிடம் காணப்படும்.

மஹாகவி சுப்பிர மணிய பாரதியாரின் மாரியம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் பற்றிக் குறிப்பிடுவது இந்த இயலுக்கு நிறைவாக இருக்கும். பொதுவாக மக்கள் மத்தியில் பெரிதும் இடம்பெற்றிருக்கும் கிராமிய மரபுகளையே பாரதி தன் கவிப் பொருளாகப் பயன்படுத்தியுள்ளார்.

திரௌபதி என்னும் தெய்வீகப் பெண்ணின் சிறப்புச் சாதாரண மக்களின் உள்ளங்களில் நிறைந்திருப்பதை அவதானித்த அவர் பாஞ்சாலி சபதம் என்ற குறுங் காவியத்தை உருவாக்கிக் குறிப்புப் பொருளாகப் பல விடயங்களை அறிவுறுத்தினார்.

இதுபோலவே மாரியம்மன் என்ற கிராமியத் தெய்வம் மக்கள் மத்தியில் தனியான ஓரிடத்தைப் பெற்றிருப்பது அவரது கவனத்திற் பட்டமையாற்போலும் மாரியம்மன் பற்றிய இரு பாடல்கள் மூலமாகப் பண்பாட்டுணர்வைப் புலப்படுத்துகின்றார்.

மணி வெளுக்கச் சாணையுண்டு
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி

என்று ஒரு பாடலிலும் (முத்துமாரி)

தேடியுன்னைச் சரணடைந்தேன்
தேசமுத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய்
கேட்ட வரந் தருவாய்

என்று இன்னொரு பாடலிலும் (தேசமுத்துமாரி) அவர் வேண்டுகிறார்.

இவ்வாறு மாரியம்மன் வழிபாடு கிராமிய மட்டத்தில் ஆகமம் சாரா நெறிமுறையில் எவ்வாறு வழங்குகிறது என்பதை இந்த இயலில் அவதானித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் - 5

# யாழ். குடாநாட்டு மாரியம்மன் கோயில்களும் வழிபாட்டு முறைகளும்

தமிழர் வாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் மாரியம்மன் வழிபாடு தமிழ்கூறும் நல்லுலகெங்கும் பரவிக் காணப்படுகிறது. அதாவது தமிழர்வாழும் பிரதேசங்கள் உலகில் எங்கெங்கு காணப்டுகின்றனவோ அங்கெல்லாம் நிச்சயமாக மாரியம்மன் கோயில்களும் காணப்படுகின்றன.

அந்தவகையில் ஈழத்திலும் கிழக்குமாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் மலையகத்திலும் வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் மாரியம்மன் கோயில்கள் அமைந்திருக்கின்றன.

இவ்வியல் ஏனைய இயல்களிலிருந்து வேறுபட்டது. ஏனெனில் இது நேரடியான கள ஆய்வு தொடர்பானது. ஒருவகையில் நேரே கண்களால் கண்டு, உணர்ந்து, ஆராய்ந்து அறிகின்ற தெளிவான தகவல்கள் இங்கு இடம்பெறும் என்பது உண்மையே. அதேசமயம் பல ஆலயங்கள் பற்றிய தகவல்கள் தகுந்த ஆதாரங்கள் அற்ற செவிவழிச் செய்திகளே என்பதையும் மனம் கொள்ள வேண்டும். மேலும், முழுமையாக எல்லா ஆலயங்களுக்கும் சென்று ஆய்வு நடத்தப்படவில்லை என்பதையும் வாய்ப்புக் கிடைத்த சில ஆலயங்கள் மட்டும் வகைமாதிரிக்கு எடுக்கப்பட்டுள்ளன என்ற செய்தியையும் இங்கு சொல்லவேண்டும்.

யாழ்.குடாநாட்டிலுள்ள மாரியம்மன் கோயில்கள் பற்றி ஆராயும்போது இங்குள்ள சுமார் முப்பதுக்கு மேற்பட்ட மாரியம்மன் கோயில்கள் பற்றிய தகவல்கள் கிட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சக்திவழிபாடு பற்றி ஆராய்ந்த மாரிமுத்து வேதநாதன் அவர்களின் ஆய்வேட்டில் சுமார் இருபது மாரியம்மன் கோயில்கள் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இலங்கை அரசின் யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சைவத் திருக்கோயில்கள் பற்றிய நூலில் சுமார் முப்பது வரையான மாரியம்மன் கோயில்கள் கூறப்படுகின்றன.

இக்கோயில்களில் சில முக்கியமான கோயில்கள் பற்றிய விபரங்கள் முதலில் இங்கு தனித்தனியாகத் தரப்படுகின்றன. அதன் பின் பொதுவாக இப்பிரதேசத்திலுள்ள மாரியம்மன் கோயில்களிலே நடைபெறுகின்ற ஆகம வழிபாட்டு முறைகள், ஆகமம் சாரா வழிபாட்டு முறைகள், பரிவாரசந்நிதிகள், ஓவியம், கூத்து முதலிய கலையம்சங்கள் பற்றி விபரிக்கப்படுகிறது.

*வல்லை ஸ்ரீ முத்துமாரியம்மன்.*

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றையுடைய இவ்வாலயம் மிகப் பிரம்மாண்டமான கோயிலாகும். அகன்ற பெரிய வீதிகளையும் ராஜகோபுரத்தையும் கொண்டு விளங்கும் இவ்வாலயத்தில் மூலஸ்தானத்திலே மாரியம்மன் கம்பீரமாகக் காட்சிதருகின்றாள்.

விநாயகர், சுப்பிரமணியர் முதலிய பரிவார தெய்வங்கள் யாவும் இருப்பதோடு இங்கு காத்தவராயருக்குகென்று தனியான சந்நிதி ஒன்றும் இருக்கிறது. வேறு எங்கும் காணப்பட முடியாத தனித்துவம் வாய்ந்த ஓரம்சமாக இங்கு இருசக்திகளுடன் சிலா விக்கிரமாகக் காத்தவராயன் காணப்படுகிறார். உள்வீதியில் அக்கினித்திசையில் மேற்கு முகமாக இவரது சந்நிதி காணப்படுகிறது.

ஒரேகல்லில் வடிவமைக்கப்பட்ட இத்திருவுருவத்தில் கருப்பாசி, முத்தாசி என் அழைக்கப்படும் இரு துணைவியரையும் இருபுறமும் அணைத்தபடி காத்தவராயன் காணப்படுகிறார். இதனருகிலேயே குதிரைமீதமர்ந்தவாறு தனியே காத்தவராயர் மட்டும் தாம்ர விக்ரகமாக உற்சவர் என்றவகையில் காணப்படுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டித்துறை சிவன் கேயிலுக்கும் முந்திய வரலாற்றையுடைய இக்கோயிலில் நித்திய நைமித்தியங்களைச் சைவக்குருமாரே நடத்திவருகின்றனர். சிவன்கோயில் மஹோற்சவம் ஆரம்பிப்பதற்கு முன் மாரியம்மன் உற்சவம் எனச் சிறப்பான ஒரு விழாவை நடத்துகிறார்கள்.

முன்பு இங்கு பலி கொடுக்கும் வழக்கம் இருந்ததற்கு அடையாளமாக ஆடு, கோழி என்பன நேர்ந்து தேர் உற்சவத்தன்று கோயிலுக்கு வழங்கும் வழக்கம் காணப்படுகிறது.

*அல்வாய் முத்துமாரியம்மன்.*

வடமாரட்சியிலுள்ள மிகப்பெரிய ஆலயங்களுள் ஒன்றான அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் கோயில் நீண்டகால வரலாற்றையுடையது. பழம்பெருமையோடு புதிய பொலிவும் சேர்ந்து காணப்படுகிறது.

வன்னிமன்னர் காலத்ததாகிய மரபுவழிக் கதையின்படி பலியிடுதலை ஆதாரமாக்க கொண்டு இவ்வாலயம் ஆரம்பமாயிருக்கிறது. மாயக்கை என்ற இடத்தில் பெருவெள்ளம் பாய்ந்து வருகையில் ஒரு தெய்வம் அவ்வெள்ளத்தினூடு கைநீட்டிப் பலி கேட்டது என்பர். அக்கம்மா என்று இத்தெய்வத்தைக் கூறுவர். நாச்சிமார் கோயிலொன்றும் இப்பகுதியிலுள்ளது.

வீரமாப்பாணர் என்றும் நில உடைமையாளர் பரம்பரையில் வள்ளிநாயகி என்னும் பெண்ணால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட வெண்கலைச் சிலையொன்றை வேம்பும், இலந்தையும் நிறைந்த நிலத்தில் வைத்துப் பூசித்ததாகப் பழைய வரலாறு கூறும். படிப்படியாக வளர்ந்த இவ்வாலயத்தினுள் ஒரு கல்வடிவில் காத்தவராய சுவாமி வழிபடப்பட்டார். அதற்குப் பலி கொடுப்பதும், குடிவகைகள் படைப்பதும் முற்காலத்தில் நடந்து வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் காத்தவராயருக்கென வெளிவீதியிலே கிழக்குத்திசையில் ஆலயத்துக்கு முன்பாக மேற்கு நோக்கிய சந்நிதியொன்று தனியாக அமைக்கப்பட்டது. படிப்படியாக பலியிடும் வழக்கம் அகற்றப்பட்டு விட்டது.

ஆலய உள்வீதியின் சுவர்களிலே காணப்படும் அழகிய ஓவியங்களில் ஒன்று கண்ணைக் கவர்ந்து கருத்தையும் ஈர்க்கிறது. அஷ்டபுஜமாரியம்மன் என்ற பெயரில் எட்டுக்கரங்களோடு அழகிய மாரியம்மனின் ஓவியம் காணப்படுகிறது.

இவ்வாலயத்தில் மரபுவழிப்பட்ட கிராமிய வழுபாடுகளான கரகம், காவடி, பால்செம்பு, கற்பூரச்சட்டி எடுத்தல் என்பனவும் நீர்க்கஞ்சி வார்த்தல் முதலியனவும் சிறப்பாக இன்றும் நடைபெற்று வருகின்றன. காத்தவராயன் சந்நிதி இருக்கும் இலுப்பை மரத்தில் இழைக்கட்டுதலும் காணப்படுகிறது. காத்தவராயன் கூத்து நிகழ்த்தப்படுத்தும் உண்டு.

*தம்பசிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் (பண்டாரியம்மன்)*

மேலைப்புலோலி தம்பசிட்டி சொக்கன் கலட்டி எனப்படும் வாணக்குடியிருப்புப் பகுதியிலே இருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலும், பண்டாரியம்மன் கோயிலும் அருகருகே அமைந்துள்ள இரு மாரியம்மன் கோயில்கள். ஒன்றிற்குப் போட்டியாக மற்றது அமைக்கப்பட்டது. முன்னையது அக்கா எனவும் இரண்டாவது தங்கை எனவும் அடியார்களால் செல்லமாகக் குறிப்பிடப்படுகிறது.

வாணக் குடியிருப்பு மாரியம்மன் கோயிலில் காத்தவராயனுக்கெனத் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. பண்டாரியம்மன் கோயிலில் அப்படி ஒரு சந்நிதி முன்னர் இருந்து பின்னர் நீக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக கொடித் தம்பத்தருகில் காத்தவராயர் சின்னமாகக் கழுமரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இதே போன்ற கழுமரம் திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயத்திலும் வேறுசில இடங்களிலும் உள்ளது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு கோயில்களிலும் பங்குனி மாதத்தில் பெரிய வேள்வி நடைபெறும், இவ்வேள்வியில் முற்காலத்தில் பலியிடுதல் அசைவப்படையல், மதுபானம் படைத்தல் முதலியன வழக்கிலிருந்தன. பின்னர் அவை படிப்படியாக நிறுத்தப்பட்டு இப்போது வேள்வி என்ற பெயரில் பொங்கல், படையல் நீர்க்கஞ்சி என்பன நடைபெறுகின்றன.

*கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரியம்மன்*

இந்நூலாசிரியரின் குலதெய்வமாகிய இம்மாரியம்மன் கோயில் வரலாற்றுப் பெருமை எனக்குறிப்பிடும் வகையில் அதிகம் இல்லை. ஆலயமும் எளிமையான சிறிய ஆலயமே.

அருட்சிறப்பு மிகுந்த இங்கு சித்திரைமாதம் நடைபெறும் பொங்கல் உற்சவமும் தடைவெட்டுதலும் பழைமை தழுவிய மரபுகளாகும். காத்தவராயன் கூத்தும் இவ்வாலயச் சூழலில் நடத்தப்படுவதுண்டு.

சித்திரைப் பொங்கல் நாளில் நாயகவழுந்து ஏற்றுதல் சிறப்பான ஒரு நிகழ்சியாகும். பொங்கலுக்கு வந்த யாவரும் தயாராகக் காத்திருக்கப் பரம்பரையாக உரிமையுடைய ஒரு குடும்பத்தவர் வந்து முதலில் தங்கள் பொங்கற் பானையைக் குருவின் மூலம் அடுப்பிலேற்றிய பின்னரே (இதுவே நாயகவழுந்து) ஏனைய பானைகள் அடுப்பிலேறும்.

*திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி*

திருநெல்வேலியிலும் வல்வெட்டித்துறை போலச் சிவன்கோயிலின் அருகே இந்தப் பாரிய முத்துமாரி அம்மன்கோயில் உள்ளது. தலவிருட்சமாகக் கொன்றை வேம்பு, பலா என்பன உள்ளன. இங்கும் வைசக்குரமாரே நித்திய நைமித்திகங்களைச் செய்கின்றனர்.

காத்தவராயருக்கு இங்கு தனிமண்டபமொன்றுண்டு. வைகாசி விசாகப் பொங்கலின் போது நாயகவழுந்து ஏற்றிப் பொங்கலிட்டுக் காத்தவராயர் மண்டபத்தில் படைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை தீ மிதிப்பு நிகழ்கிறது.

பங்குனித்திங்களில் நீர்மோர் வார்க்கப்படும். ஆனியில் மஹோற்சவமும், மாசியில் லட்சார்ச்சனையும் ஆகமவழிக் கிரியைகளுக்கு எடுத்துக்காட்டு.

வை. அநவரத விநாயக மூர்த்தி என்பார் இவ்வாலய வரலாற்றினை நூல்வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள்.

*தீவுப்பகுதியில்*

தீவுப்பகுதி மக்கள் பாரம்பரிய மரபுகளில் ஈடுபாடு கொண்டவர்களாயும் சைவாசாரங்களில் சிறந்தவர்களாயுமிருப்பது யாவரும் அறிந்ததே.

இப்பகுதியிலும் மாரியம்மன் கோயில்கள் பல உள்ளன. இவற்றுள் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன்கோயில் மிக முக்கியமானதாகும். முன்பு நெடுங்குளம் என அழைக்கப்பட்ட தடாகக்கரையில் இக்கோயில் அமைந்துள்ளது. நித்தியக் கிரியைகள் சைவக்குருமாராலும், நைமித்திகங்கள் அந்தணக் குரமாராலும் நிகழ்த்தப்படுகின்றன.

பலநூற்றாண்டு வரலாற்றைக் குறிக்கும் கர்ண பரம்பரைக் கதைகள் உள்ளன. ஒல்லாந்தர் காலத் தோம்புகள் மூலம் 1875இல் கருவறை உருவாக்கம் பெற்றமை பற்றிய செய்தியை அறிய முடிகிறது. கச்சேரிக் குறிப்புகள் இங்கு முன்பு மிருகபலி இருந்தமையைக் காட்டுகின்றன. இன்று இல்லை. கரம்பன், நாரந்தனை, மண்கும்பான் முதலிய இடங்களிலுள்ள மக்களும் இங்கு வந்து பொங்கல் பொங்கிப் படைத்து வழிபடுவர்.

*காரைநகர்ப்பகுதியில்*

சிவமணம் கமழும் காரைநகர்ப்பகுதியில் மாரியம்மன் ஆலயங்கள் மூன்று சிறப்புடன் விளங்குகின்றன. ஈழத்துச் சிதம்பரம் எனப்புகழப்படும் காரைநகர் சிவன் கோயிலின் சுற்றாடலில் மணற்காடு முத்துமாரியம்மன் கோயில், வலந்தலை மடத்துக்கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துமாரியம்மன், பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரியம்மன் ஆகிய ஆலயங்கள் அமைந்துள்ளன.

கடற்கரைச் சூழலில் அமைந்துள்ள பாலாவோடை முத்துமாரியம்மன் கோயில் ராஜகோபுரத்துடன் கம்பீரமாக்க காணப்படுகிறது. சூலஹஸ்தமும் நாகபடமும் சேரச் சுகாசனத்திலிருந்து அருளும் அம்பிகையின் ஆலயச் சூழல் மரங்கள் அடர்ந்து இயற்கை வளம் பொலிகிறது. வெளியே இலுப்பை மரத்துடன் சூலம் ஒன்று காணப்படுகிறது. இது இக்கோயிலின் ஆதிநிலையைக் காட்டுகிறது. இங்கு பலிகொடுத்தல் முன்பு நடந்துள்ளது.

மடத்துக்கரை முத்துமாரியம்மன் கோயிலில் ஒரு சிறப்பு அவதானிக்கப்படலாம். மூலஸ்தானத்தில் இங்கு தாம்ர விக்ரகம் காணப்படுகிறது. இங்கு கட்க ஹஸ்தமே அமைந்துள்ளது.

காரைநகர் முகப்பில் வருவோரை வரவேற்பதாக வீற்றிருக்கும் இந்த அம்மன் வழிக்கரை அம்மன் என அழைக்கப்படுகிறாள். கும்பம் வைத்து முகம் அமைத்து வழிபடும் முறை இங்கு இருந்துள்ளது. இது ரேணுகா தேவியுடன் தொடர்பானது. கமுகமரம் நாட்டிக் கொடியேற்றி அலங்காரத் திருவிழா நடைபெறுகிறது.

*வேறும் சில பிரபல ஆலயங்கள்.*

அளவெட்டி தளவகிரி முத்துமாரி அம்மன், தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் முதலிய மிகப் பிரபலமான ஆலயங்களும் இன்னும் பல ஆலயங்களும் குடாநாட்டின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன.

இவ்வாலயங்களில் நிகழும் கிரியைகளைப் பொதுவாக மூன்று பிரிவாக வகைப்படுத்தலாம்

1. பலி - படையல் முதலிய கிராமியக் கிரியை மரபு
2. அலங்கார உற்சவ மரபு
3. மஹோற்சவ மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களையும் இவ்வாறே

1. தனியே மாரியம்மன் மட்டுமுடைய சிறு ஆலயங்கள்
2. விநாயகர், முருகன் முதலிய பரிவாரதெய்வங்களுடன் கூடிய பெரிய ஆலயங்கள் என வகைப்படுத்தலாம்.

தனியே மாரியம்மன் மட்டும் உடைய சிறிய ஆலயங்கள் பெரும்பாலும் பொங்கல், படையல், குதிர்த்தி முதலியவற்றோடு காணப்படுபவை. இங்கு கிராம மக்கள் தமது வழிபாட்டைத் தாமே நடத்துகின்றனர். சிலவற்றில் பூசாரிகளும் சிலவற்றில் சைவக்குருமாரும் பூஜை நிகழ்த்துகின்றனர். இவ்வாலயங்களின் பழைய மரபுகளை விசாரிக்கும் போது இங்கு பலிகொடுக்கும் மரபு அண்மைக் காலம்வரை இருந்தமை புலப்படுகிறது.

அநேகமான ஆலயங்கள் ஆகமநெறிமுறைப்படி கட்டப்பட்டவையாக இருப்பதுடன் விநாயகர், முருகன் முதலிய பரிவார தொய்வங்களும் அங்கு பிரதஷ்டை செய்யப்பட்டிருக்கக் காணலாம். இங்கு குறைந்த பட்சம் அலங்காரத் திருவிழாக்களாவது நடைபெறுகின்றன. பெரும்பாலும் இக்கோயில்களில் நித்தியக்கிரியைகள் சைவக்குருமாராலும், நைமித்திகங்கள் அந்தண சிவாசாரியார்களாலும் நடத்தப்படுகின்றன. நித்திய நைமித்திகங்கள் யாவும் அந்தணர்களாலேயே நடத்தப்படும் மாரியம்மன் கோயில்களும் உள்ளன.

விநாயகர் முதலிய பரிவார தெய்வங்கள் இருப்பதும் ஆகம நெறிமுறைப்படி கட்டங்கள் கட்டப்பட்டிருப்பதுமல்லாமல் கொடியேற்று வைபவத்துடன் மஹோற்சவம் நிகழ்வனவாயும் இருக்கும் ஆலயங்களிலே மாரியம்மன் உமாதேவியாரின் அம்சம் என்பதை நினைவூட்டுவதாக இருக்கிறது.

ஆறுமுகநாவலர் போன்ற சைவப்பெருமக்களின் முயற்சியால் சிறுதெய்வவழிபாட்டு முறையாகப் பலிகொடுத்தல் முதலியவற்றோடிருந்த பல ஆலயங்கள் படிப்படியாகத் தரமுயர்த்தப்பட்டன. சைவசித்தாந்தம் போதிக்கும் அன்பு நெறிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணான இவ்வழிபாட்டு முறைகள் விலக்கப்படவேண்டும் என்று எடுத்துக்கூறியும் கண்டித்தும் இப்பெரியார்கள் முயற்சி செய்தமையால் படிப்படியாக இவ்வாலயங்கள் சிவாகம நெறிமுறைக்கமையக் கட்டியெழுப்பிப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றன.

இவ்வாலயங்களில் பூஜைசெய்த சைவக்குருமார் பலர் தாமும் அத்தகைய நிலைக்குத் தரம் உயர்ந்து வடமொழிப்பயிற்சியும் சிவாகம அறிவும் பெற்று சிவாசார்யாபிஷேகம் செய்யப்பெற்றுத் தாமே அவ்வாலயங்களில் மஹோற்சவங்களையும் செய்விக்கிறார்கள், வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயில், தம்பசிட்டி பண்டாரியம்மன் கோயில் திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவில் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவ்வாறு மஹோற்சவம் முதலிய சிறப்புக்களிருப்பினும் பழமையான பொங்கல், குளிர்த்தி, மடைபரவுதல் முதலிய யாவும் கைவிடப்படாமல் தொடர்ந்து பேணப்படுகின்றமை சிறப்பம்சமாகக் குறிப்பிடப்படலாம். பலிகொடுத்தல் மட்டும் நிறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் பழைய முறைகளின் தொடர்ச்சியான ஞாபகச் சின்னமாகக் காத்தவராயன் சந்நிதானம் இங்குள்ள பல மாரியம்மன் கோயில்களில் விசேஷமாகக் காணப்படுகிறது. மற்றெந்த ஆலயங்களிலும் இல்லாமல் மாரியம்மன் கோயிலில் மட்டும் காணக்கூடிய பரிவார தெய்வம் இந்தக் காத்தவராயன் ஆகும்.

பல இடங்களில் ஒரு கல்வடிவில் அல்லது சூலவடிவில் அடையாளச் சின்னமாகவே காத்தவராயர் காணப்படுகிறார். சில இடங்களில் இவர் கழுவேற்றப்படுகின்ற வரலாற்றுத் தொடர்பை நினைவூட்டும் வகையில் கழுமரம் ஒன்று காணப்படும். தம்பசிட்டி பண்டாரியம்மன் கோயில் இதற்கொரு உதாரணமாகும்.

காத்தவராயர் திருவுருவமாக வணங்கப்படுவது மிகச்சில இடங்களில் தான். அதுவும் இரு சக்திகளுடன் கூடிய திருவுருவம் காணப்படுவதும் உற்சவ மூர்த்தி காணப்டுவதும் அபூர்வமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியாக வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயில் பற்றிய தகவல்களில் தரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்து மாரியம்மன் கோயில்கள் கிராமியக் கலைகளின் வளர்ச்சிக்குத் தூண்டு கோலாக இருந்து வருகின்றன. கரகம் எடுத்தல், காவடி ஆடுதல், உடுக்கடிப்பாடல் முதலிய கலைகள் பொதுவாக எல்லா மாரியம்மன் கோயில்களிலும் பாரம்பரியமாகப் பேணிவரப்படுகிறது. உடுக்கு அடித்துப் பாடுகின்ற மாரியம்மன் தாலாட்டு முதலிய பாடல்கள் வேறு எந்தத் தெய்வங்களுக்கு மில்லாத ஒரு தனித்துவமான சிறப்பாகும்.

பறையடித்தல் என்பது பழந்தமிழருக்கே உரிய ஒரு கலை. முரசு என்ற புராதன வாத்தியமான பறையை வாசித்தல் மாரியம்மன் கோயில்களில் காணப்படும் ஒரு நடைமுறையாகும்.

நுண்கலைகளும் இவ்வாலயங்களினூடாகப் பேணப்பட்டு வருகின்றன. வளர்ந்து வரும் பெரிய மாரியம்மன் கோயில்கள் பல்வேறு சந்நிதிதானங்கள், மண்டபங்கள் அமைக்கப்பட்டு சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டு விக்கிரகச் சிறப்பும் உடையனவாக உள்ளன. சுவரோவியங்களும் கண்ணைக் கவருகின்றன. அல்வாய் முத்துமாரியம்மன் கோயில், அண்மையில் புதிதாகக் கட்டப்பட்ட பண்டத்தரிப்பு, பிரான்பற்று முத்துமாரி அம்மன் கோவில் என்பன இதற்குச் சிறந்த ஓர் உதாரணமாகும். இவ்வகையில் இந்துப்பண்பாட்டு மரபுகளைப் பேணிப் பாதுகாப்பதிலும் மாரியம்மன் கோயில்கள் பங்கெடுக்கின்றன.

இங்குள்ள அதிக எண்ணிக்கையான மாரியம்மன் கோயில்கள் இப்பிரதேசத்திலுள்ள சைவ மக்களின் உள்ளங்களில் மாரியம்மன் வழிபாடு பெற்றிருக்கும் உந்நதமான இடத்தைக் காட்டுகிறது எனலாம்.





- கோப்பாய் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபந்தம் – I

### மாரியம்மனுக்கு வழங்கும் பல்வேறு தியான சுலோகங்களும் அவற்றின் பொருளும்.

1. அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்
டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்
நிகில சுர சுவந்த்யாம் நித்ய கல்யாண சீலாம்
அகில புவன மாதாம் சியாமளாம் மாரிமீடே

2. அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் ததானம்
டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்
நிகில விபுத வந்த்யாம் நித்ய கல்யாண சீலாம்
அகில புவன மாதாம் சியாமளாம் மாரிமீடே

3. அருணகிரண காந்திம் அக்னிகேசம் கரண்டம்
டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்
அநல நயன நாகம் ஆசனம் வீர வ்ருத்தம்
அகில புவன மாதா மஹாமாரி ஸ்வரூபம்

4. அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்
டமருக தர சூலம் கட்க ஹஸ்தம் கபாலம்
அநல நயன நாகம் பத்ம பீடஸ்தமீடே
நிகில புவன தைவம் சீதளாம் மாரிரூபம்

இத்தியானங்களில் "டமருக கர பாசம்" என்பதற்குப் பதிலாக "டமருக கர சூலம்" எனவும் பாடபேதம் உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வாமே பாச கபால சூல டமரும் ஊர்த்வ கேசம் த்ரிநேத்ரம் கர்ண தாடங்க யுக்தம் ஸ்தனபர யுகளம் கஞ்சுகம் சன்னவீரம் ரௌத்ரம் வீராசனஸ்தம் ஜ்வரவிஷபிசிதா ஸ்போடகாதி ப்ரரோகம் ராஜ விரூப வ்ருக்ஷம் மாரிதேவீம் நமஸ்தே

4. ஏகவக்த்ரம் சதுர்பாஹும் டமரும் பாச கட்ககம்
ரக்தபாத்ர தரம் திவ்யம் சர்வாபரண பூஷிதம்
ஸர்வலக்ஷண ஸங்காசம் மாரிகாமிதி பாவயேத்

5. த்ரிநேத்ராம் சதுர்புஜாம் சௌம்யாம் ரக்த வர்ணாம் சுயௌவனாம்
கட்கம் கபால சம்யுக்தாம் பாசம் டமருகம் ததா
மஹாமாரீ ஸ்வரூபந்து முக்தாதிபிரலங்க்ருதாம்

6. சதுர்புஜாம் த்ரிநேத்ராம்ச டமரும் பாசமேவ ச
கட்வாங்கம் ச கபாலம் ச நாக யஜ்ஞோப வீதினீம்
ஊர்த்வ கேசாம் சுதம்ஷ்ட்ராம் ச சர்வம் மௌத்திக பூஷணாம்
சர்வாபரண சம்யுக்தாம் முக்தா தாமை ரலங்க்ருதாம்
ஏவம் த்யாத்வா மஹாமாரீம் மாரீ மந்த்ரேண பூஜயேத்

7. முக்தாபாம் திவ்ய வஸ்த்ராம் ம்ருக மத திலகாம்
புல்ல கல்ஹார மாலா
கேயூரைர் மேகலாத்யைர் நவமணி கசிதைர்
பூஷிதைர் பாசமானாம்
கர்ப்பூரா மோத ஹஸ்தாம் அபரிமித க்ருபா
பூர்ண நேத்ரார விந்தாம்
ஸ்ரீ தேவி மார்யயாம் பசுபதி ஹ்ருதயாம்
விஸ்வ பூத்யை நமாமி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. த்ரிநேத்ரா சதுர்புஜா சாந்தா கராள வதனான்விதா
ஜ்வலோர்த்வ கேசினீ ரக்தா கபால கட்க பாசினீ
டமருந் தார்யதே சைவ பத்ம பீடோபரிஸ்ததா
சயனம் வாம பாதந்து லம்பிதம் சவ்ய பாதகம்
க்ருஷ்ண வஸ்த்ர சமாயுக்தா நாக யஜ்ஞோப வீதிநம்
தாடங்கம் தக்ஷிணே கர்ணே வாமே லம்ப சமன்விதாம்
சர்வாபரண பூஷ்யஞ்ச ப்ரபா மண்டல மத்யகாம்

இங்குள்ள எல்லாத் தியானங்களுக்கும் பொதுவான சில அம்சங்கள் காணப்படுகின்றன. அதாவது சிவந்த நிறமுடையவள், அக்னி ஜடையுடையவள், டமருகம், பாசம் இரண்டையும் மேலிரு கரங்களிலும் தாங்கியவள், தலையில் நாகபடம் விளங்க வீற்றிருப்பவள். இடது கீழ்க்கரத்தில் கபாலம் காணப்படுகிறது.

சில தியானங்களில் சூலமும் வேறு சிலவற்றில் கட்கமும் வலது கீழ்க்கரத்திற்குச் சொல்லப்படுகிறது. மூன்று கண்கள் சில தியானங்களில் கூறப்படுகிறது. அகன்ற முகம். முத்து மாலை என்பன சிலவற்றில் குறிப்பிடப்படுகின்றன.

எல்லாத் தியானங்களும் சௌம்மிய மூர்த்தமாக சாந்த ரூபமாக வர்ணிக்க ஒரு தியானம் மட்டும் ரௌத்தர ரூபம் என்கிறது. இவ்வாறு மாரியம்மனின் தோற்றப்பொலிவை பல்வேறு தியானங்கள் மூலமாக அறிய முடிகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரியம்மனின் பரிவார தேவதைகளின் விபரம்

உத்தர காரணாகமத்தில்

பிரதமாவரணம்- வழமை போல எல்லாத் தேவதைகளுக்கும் பொதுவாக இடம்பெறுகின்ற பஞ்சப் பிரம்ம ஷடங்க மந்திர தேவதைகள்.

துவிதீயாவரணம்-காளீ, காலராத்ரீ, பத்ரா, கோமளீ, யாமளீ, பாசாங்கீ, சகோராரீ, ஷட்கோண வாசினீ.

திருதீயாவரணம்- பிருதுவீ, அத்பினீ, தேஜஸ்வீ, வாயவீ, ஆகாசீ, ஆதித்யா, சந்த்ரா, யஜமானீ.

சதுர்த்தாவரணம்- லோக பாலகர்கள்.

பஞ்சமாவரணம்- வஜ்ரம் முதலிய தசாயுதங்கள்.

ருத்ர யாமளத்தின்படி,

துவிதீயாவரணம்- வாமா, ஜ்யேஷ்டா, காளீ, கலவிகரணீ, பலவிகரணீ, பலப்பிரமதனீ, சர்வ பூத தமனீ, மனோன்மனீ என மாற்றம் பெற்று வருகிறது.

இன்னொரு கைப்பிரதியில்,

துவிதீயாவரணம்- பிராமீ, மாஹேஸ்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்த்ரீ, சாமுண்டீ, மஹாலக்ஷ்மீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருதீயாவரணம்- கங்கா, யமுனா, நர்மதா, மோஹினீ, சுராசனா, பத்ரா, காவேரீ, பயோஷ்ணீ.


சதுர்த்தாவரணம்- இந்திராணீ, தேஜோரூபா, நீலினீ, கட்கினீ, பாசினீ, த்வம்சினீ, தண்டினீ, சூலினீ.

பஞ்சமாவரணம்- திரிசூலம்,கலசம், கட்கம், கபாலம், முசலம், வேதாளம், டமருகம், பாசம்.

ஷஷ்டாவரணம்- உத்பூதா, சக்தி பூதா, மஹாபூதா, வேதாளபூதா, பைசாசபூதா, காலராத்ரிபூதா, சிஞ்சினீபூதா, உக்ரபூதா, அசனீபூதா, மஹாபயபூதா, குரூரபூதா, ராக்ஷசபூதா.

எனக் காணப்படுகிறது. இப்பிரதி நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சு.இராஜேந்திரக் குருக்களிடம் இருப்பது. வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சோ. தண்டபாணி தேசிகரிடம் கிடைத்த இன்னொரு பிரதியில் வேறுசில மாறுதல்கள் காணப்படுகின்றன.

துவிதீயாவரணம்- கணாம்பிகா சீதளா, கங்கா சீதளா, கௌரீ சீதளா, காவேரீ சீதளா, புரந்தரீ சீதளா, பாலா சீதளா, பிராமீ சீதளா, வைஷ்ணவீ சீதளா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுபந்தம் 3

### யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சில முக்கிய மாரியம்மன் கோயில்கள்


கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
தம்பசிட்டி பண்டாரியம்மன் கோயில்.
தம்பசிட்டி வாணக்குடியிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
தும்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
வட்டு கிழக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
வட்டுக்கோட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
வேலணை கிழக்கு பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
ஊர்காவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
காரைநகர் மணற்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
காரைநகர் பாலாவோடை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
புங்குடு தீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
தெல்லிப்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
குரும்பசிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
குப்பிளான் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
நவாலி தெற்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
அல்லைப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
மட்டுவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
சுன்னாகம் சூராவத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
கந்தரோடை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
பண்டத்தரிப்பு பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.
பண்டத்தரிப்பு பிரான்பற்று ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.

இவற்றைவிட எமது ஆய்வுக்குள் எட்டாத இன்னும் பல மாரியம்மன் ஆலயங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கன்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ



**உபசர்க்கா ந சேஷாம்ஸ்து**
**மஹாமாரீ ஸமுத்பவான்**
**ததா த்ரிவிதம் உத்பாதம்**
**மாஹாத்ம்யம் சமயேன் மம**

*பெருநோய்களால் வரும் மரணங்களையும் விபத்துக்களையும் மூவகையான துன்பங்களையும் எனது மஹாத்ம்யம் போக்குவதாயிருக்கட்டும்.*

*-- தேவீ மஹாத்ம்மியம் அத்.12 8ம் சுலோகம்.*

*மூவகைத் துன்பம்:*

*1. ஆதி ஆத்மிகம் - உடல்நோய், உடல் சம்பந்தமுள்ளவர்களின் பிரிவு.*

*2. ஆதி பௌதிகம் - கொடிய பிராணிகளால் ஏற்படுவது.*

*3. ஆதி தைவிகம் - இடி, மழை முதலியவற்றால் வரும் இயற்கைத் துன்பம்.*



- கோப்பாய் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவரைப் பற்றி...

பழம்பெரும் எழுத்தாளரான அமரர் பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மாவின் புதல்வரான கோப்பாய் - சிவம் சஞ்சிகைகள், பத்திரிகைகள், வானொலி அனைத்திலும் ஓய்வின்றிப் பல்துறைகளிலும் எழுதிவருபவர். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் படவரைஞராகக் கடமையாற்றிவிட்டு இப்போது ஆன்மீக - ஆலயப் பணிகளிலும் நூல் வெளியீட்டு முயற்சிகளிலும் முழுமையாக ஈடுபட்டுவருகின்றார். 'விவித வித்யா" என்னும் ஆன்மீகக்காலாண்டிதழை வெளியிட்டு வரும் இவர் சர்வானந்தமய பீடம் என்ற தனிநபர் அமைப்பினூடாகச் சமயப் பணிகள் ஆற்றிவருபவர். சமஸ்கிருதக் கல்லூரி ஒன்றையும் நடத்தி வருகின்றார்.

1984 ஆம் ஆண்டுக்கான ஆக்க உரிமைகள் வியாபாரக் குறிகள் பதிவகத்தின் இலக்கியப் போட்டியில் தமது சிறுகதைகளுக்காக ரூ 5.000 பரிசு பெற்றவர். வீரகேசரி நடத்திய புத்தாண்டுக் கவிதைப் போட்டி ஒன்றிலும் ரூ 5.000 பரிசு பெற்றவர். நீர்ப்பாசனத் திணைக்களக் கடன்வழங்கும் சபை நடாத்திய கட்டுரைப் போட்டி "களம்", 'தாரகை" சஞ்சிகைகள் நடத்திய சிறுகதைப் போட்டி 'செவ்வந்தி" சஞ்சிகை நடத்திய கவிதைப் போட்டி. யாழ். இலக்கிய வட்டம் நடத்திய குறுநாவல் போட்டி. 'வீரகேசரி" யின் ஆய்வுரைப்போட்டி முதலிய அநேக போட்டிகளில் பரிசுகளைப் பெற்றவர். இவர் 'அம்புஜம்" கையெழுத்துச் சஞ்சிகையை எட்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தியதுடன் 'புதுவை" 'செங்கதிர்" ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றவர். நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தமிழ்ப்பண்பாட்டுக்கழகத்தின் 'அருவி" சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் இருந்தார். பல்வேறு இலக்கிய, சமய, சமூக சங்கங்களில் செயலாளராகவும் அங்கத்தவராகவும் இருந்து சேவையாற்றுபவர்.

'கனவுப்பூக்கள்" கவிதைத்தொகுதி. 'நியாயமான போராட்டங்கள்" சிறுகதைத் தொகுதி. 'சைவாலயக்கிரியைகள்", 'சைவவிரதங்களும் விழாக்களும்" "ஆற்றல் நல்கும் ஆஞ்சனேயர்". 'பெருமாள் பெருமை" முதலிய ஆன்மீக நூல்கள், 'பொறுக்கிய முத்துக்கள்" (பொன் மொழித்தொகுப்பு), 'இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைள் , சஞ்சிகைகள்" (ஆய்வுத்தொகுப்பேடு) ஆகியனவும் பல சமஸ்கிருத பத்ததி நூல்களும் இவரால் வெளியிடப்பட்டுள்ளன.

Cover Print: Guru Printers, 56, Adiyapatham Road, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org